பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

குறைந்த செலவில் குடும்பமாக
கனடாவில் குடியேற...
WINSTAR VISA
CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
(சி/400)
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஐப்பசி 11 | சனிக்கிழமை 28.10.2017 | கதிர் 356

# முதல்வர் விக்கி, ஆலோசகர் நிமலன் மீதான நிதிக் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது!

## அதற்காக இருவரிடமும் நிபந்தனையற்ற மன்னிப்பும் கோரல்



முதல்வர் விக்னேஸ்வரனிடமும், நிமலன் கார்த்திகேயனிடமும் நிபந்தனை ஏதுமற்ற பகிரங்க மன்னிப்புக் கோருகின்றார் என்றும் தமது

றொறன்ரொ, ஒக்.28

'கனேடியத் தமிழ் மக்கள் வடக்கு மாகாண சபைக்கென சேர்த்து வழங்கிய ஐம்பதாயிரம் டொலரை தவறாகப் பயன்படுத்தினர் என்று நிதிக்குற்றவியல் பொலிஸாரிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் அவரது ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு' என்ற தலைப்பில் தனது இணையத் தளத்தில் தாம் வெளியிட்ட செய்தியை பிரபல ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் திரும்பப் பெற்றுக் கொள்கிறார் என அறிவித்துள்ளமையோடு,

பக்கம் 03

# நீதித்துறையினர் மீதான வழக்கை விசாரிக்க நீதியரசர்கள் பின்னடிப்பு

## சட்டமா அதிபர் திணைக்களத்தினர் மீது சுமத்தப்பட்ட சித்திரவதைக் குற்றச்சாட்டு விவகாரத்தில் சர்ச்சை

கொழும்பு, ஒக்ரோபர் 28

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தை விசாரிக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சொலிஸிட்டர் ஜெனரல் தரத்திலான அதிகாரிகள் தன்னை அவமானப்படுத்தி, சிறுமைப்படுத்தி, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தி சித்திரவதை செய்தனர் என்று குற்றம் சுமத்தி, மத்திய வங்கியின் இளநிலை அதிகாரி தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்யும் உயர்நீதிமன்ற ஆயத்தில் இடம்பெறுவதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பின்னடிப்புக் காட்டுகின்றனர்.

பக்கம் 18

### அரசியல் கைதிகள் விடயத்தில்

## அரசின் அசண்டையான போக்கை கண்டித்து போராட்டத்துக்கு முஸ்தீபு

(எஸ்.நிதர்ஷன்)

அரசியல் கைதிகள் விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் அசண்டையாக இருந்து வருகின்ற நிலையில், அரசுக்கு எதிராகவும் அதே நேரம் அரசுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகள் விவகாரம் குறித்து பொது

பக்கம் 18

### பதுமனின் வழக்கு

## உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விசாரிக்க இணங்கி வருவரா?

### அடுத்த தவணையில் தெரியவரும்

கொழும்பு, ஒக்.28

சட்டமா அதிபர் திணைக்கள உயரதிகாரிகளினால் தாம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் எனத் தெரிவித்து மத்திய வங்கி அதிகாரி பதுமநாதன் (பதுமன்) தாக்கல்செய்துள்ளஅடிப்படை உரிமைமீறல் மனுவை விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்றின் மூன்று நீதியரசர்கள் ஆயம் அமையுமா என்பது சர்ச்சையாகத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வழக்கில், பிணைமுறி தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மூவரும் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் தற்போதைய உயர்நீதி

பக்கம் 18

### பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்து ஏமாற்றப்பட்டதால்

## கணவன் உயிரை மாய்த்த இரு மாதங்களில் மனைவி 3 குழந்தைகளுடன் உயிர் துறப்பு

### அரியாலையில் நேற்றுப் பெரும் துயரம், சோகம்

யாழ்ப்பாணம், ஒக்.28

1 கோடியே 17 லட்சம் ரூபா பணத்தை வாங்கியவர்கள் ஏமாற்றியதால் கணவன் உயிரை மாய்த்துக் கொண்ட நிலையில், அக்குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் 3 பச்சிளம் குழந்தைகள் உட்பட 4 பேர் நேற்று தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பக்கம் 18



# தமிழர் தரப்பு கட்சிகள் 70 ஆண்டு கால நீண்ட அரசியல் வரலாற்றில் சாதித்தவை என்ன?

## சம்பந்தனுக்கு 8 கேள்விகளுடன் மன்னார் பிரஜைகள் குழு மகஜர்

- மன்னார் செய்தியாளர் வாஸ் கூஞ்ஞ -

மன்னார், ஒக். 28

கடந்த 70 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி அடங்கிய தமிழர் தரப்புக் கட்சிகள் சாதித்தவை என்ன?

– இவ்வாறு மன்னார் பிரஜைகள் குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

தற்போதைய அரசுடன் பல விடயங்களில் இணங்கி, இணக்க அரசியல் நடத்தும் தாங்கள், இந்த இணக்க அரசியல் மூலம் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பலாம் என்று வலியுறுத்துவீர்கள் என்றால் எழுபது ஆண்டு கால அரசியல் வரலாற்றில் தமிழ் தரப்பு தென்னிலங்கையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் இணக்க அரசியல் போக்கு மூலம் ஏதாவது ஒரு நன்மையைப் பெற்றுள்ளோம் எனத் தங்களால் குறிப்பிட்டு எதுவும் கூற முடியுமா? என்றும் பிரஜைகள் குழு கேள்விகளை முன்

பக்கம் 18

# வவுனியா பொருளாதார மத்திய நிலைய வேலைகள் தொடர்பாக மக்கள் சந்தேகம்!

வவுனியா, ஒக். 28

வவுனியா மாவட்டத்தில் சுமார் 20 கோடி ரூபா முதல் கட்ட நிதியில் சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பில் அமைய விருந்த பொருளாதார வர்த்தக அமையம், தற்போது 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் மத்திய கிராமிய பொருளாதார அமைச்சின் நேரடிக் கண்காணிப் பல் அமைக்கப்பட்டு வருகின்றது.

வெளிப்படைத்தன்மையற்ற வகையில் மூடப்பட்ட பெரிய சுவர்களுக்கு மத்தியில் காணியின் விஸ்தீரணங்களோ, அமைக்கப்படும் பொருளாதார மையத்தின் நிதியொதுக்கீடு மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்துகையுமின்றி அமைக்கப்படும் பொருளாதார மையம் எந்த வகையில் விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக அமையப்போகிறது என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் தற்போது விவசாயிகளிடம் இருந்து பெரும் பணத்தை ஏப்பமிட்டு வரும் இடைத்தரகர்களிடம் இருந்து விவசாயிகள் தப்பித்துக்கொள்ளும் வகையில் இந்தப் பொருளாதார மையம் அமையுமா என்ற சந்தேகம் உள்ளது.

குறிப்பாக கிராமிய பொருளாதார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் பொருளாதார மையமொன்றை அமைப்பதற்கு நகரில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் 5 ஏக்கர் விஸ்தீரண மான காணி வழங்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் வவுனியாவவை சேர்ந்த அரசியல்வாதிகளின் இழுபறிநிலையால் ஓமந்தையா, தாண்டிக்குளமா என்ற வாத பிரதிவாதங்கள் தற்போது இப் பொருளாதார மையத்தை மதகுவைத்த குளத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

இப்பிரதேசம் வன்னியின் பெரிய இராணுவ முகாமான ஜோசப் முகாமுக்கு முன்பாக அமைந்துள்ளது. இப்பகுதி இரு இனகுழுமங்கள் கலந்து வாழும் பிரதேசமாகக் காணப்படுவதுடன் கலப்பு திருமண முறைமைகளும் உள்ள பிரதேசமாக உள்ளது.

எனினும், சிங்கள மக்களின் ஆதிக்கம் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றமையால் அப் பகுதியை தமிழ் மக்கள் ஒரு ஒதுக்கப்பட்ட பிரதேசமாகக் கருதும் நிலை உள்ளது.

ஏனெனில் யுத்த காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த பலரே இராணுவ புலனாய்வாளர்களுடன் இணைந்து செயற்பட்டமை மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளின் தளமாகவும் காணப்பட்டமையே இவ்வாறான நிலைக்குக் காரணம் எனலாம்.

எனவே தற்போது இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான அதிகளவு நிதி முதலில் இப் பொருளாதார அமையம் அமைவதானது நீடித்த செயற்பாட்டுக்குஇது வழிசமைக்குமா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-100)

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது தாக்கல்செய்யப்பட்ட வழக்கு டிசெ. 14ற்கு ஒத்திவைப்பு !

கொழும்பு, ஒக். 28

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சதோச ஊழியர்கள் சிலரை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வைத்ததன் மூலம் 4 கோடி ரூபா நிதிமோசடி செய்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010, 2014 ஆம் ஆண்டு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் 150 சதோச ஊழியர்களின் உத்தியோகப் பூர்வ வேலைக்குப் பதிலாக அவர்களை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வைத்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாணவர்களுக்கு அன்பளிப்பாக சைக்கிள்கள்!



வவுனியா, ஒக். 28

சுவிஸ் நாட்டை மையமாகக் கொண்டு செயற்படும் எழுகை அமைப்பின் நிதி அனுசரணையில் எழுகை இலங்கை கிளையினரால் வவுனியா மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் பிரதேச செயலாளரால் சைக்கிள் வழங்கப்பட்டன.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களான வவுனியா அம்மி வைத்தான், மருதோடை, நாவற்குளம் மற்றும் கண்டியை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கே இத் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டது.



வவுனியா ஊடகவியலாளர்கள் சிலரால் ஒழுங்கமைக்கப்பட்ட இந் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா கலந்து கொண்டு சைக்கிள்களை வழங்கினார். (க-100)

# வழக்கு வவுனியாவிற்கு மாற்றப்படும் வரை உண்ணாவிரதம் தொடரும்: பொது அமைப்புக்கள் அடங்கிய குழுவிடம் கைதிகள் தெரிவிப்பு!



கொழும்பு, ஒக். 28

அநுராதபுரம் சிறைச்சாலை யில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகளை பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளைச் சோந்த குழுவொன்று நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியது.

அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அழுத்தங்களை ஏற்படுத்துவதற்காக ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய பிரமுகர்கள் நான்கு பேரே அனுரதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கைதிகளைச் சந்தித்துள்ளனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகங் களுக்கு அவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

கைதிகள் 31 ஆவது நாளாக உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுவருகின்றமையால் அவர்களது உடல்நிலை மோசமடைந்துள்ளது.

இந்த நிலை நீடித்தால் அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும்.

மேலும், தமது வழக்குகள் வவுனியாவுக்கு மாற்றப்பட்டால் மட்டுமே உண்ணாவிரதத்தை தம்மால் கைவிட முடியும் எனவும் வழக்குப்போடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று சாதகமான பதில் கிடைக்காது விட்டால் தாம் உண்ணாவிரதத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் கைதிகள் எம்மிடம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன், கிராமிய, உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் இன்பநாயகம், தமிழ் மக்கள் வாழ்வுரிமை இயக்க இணைப்பாளர் எஸ்.சோதிலிங்கம் ஆகியோரே அநுராதபுரம் சென்றிருந்தனர். (க-100)

# புதிய அரசமைப்புக்கு எதிராக நாளை பாலமுனை பிரகடனம்

## தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா அறிவிப்பு

அக்கரைப்பற்று,ஒக்.28

உத்தேச புதிய அரசமைப்பு நாட்டு மக்களுக்கு பாதிப்பாக அமைந்துள்ளதால் அதனை கண்டித்தும், மீளப்பெற்றுக் கொள்ளுமாறு கோரியும் தேசிய காங்கிரஸ்கட்சிநாளைஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் பாலமுனை பிரகடனத்தை செய்யவுள்ளதாக தேசிய காங்கிரஸ்கட்சியின் தலைவரும்,முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

நேற்று மாலை அக்கரைப்பற்று கிழக்கு வாசல் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்ஏ.எல்.எம்.அதாவுல்லா இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு எதிர்காலத்தில் நிம்மதியற்ற வாழ்க்கையை புதிய அரசமைப்பு ஏற்படுத்தப் போகின்றது. சிறுபான்மையின முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் பெரும் பாதிப்பு உள்ளதால் எந்தக் காரணத்தைக் கொண்டும் இதனை ஆதரிக்க முடியாது.

சிறுபான்மையினக் கட்சிகள் மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு கையை உயர்த்தி வரலாற்றுத் துரோகம் செய்ததைப் போல புதிய அரசமைப்புக்கும் கையை உயர்த்திவிடுவார்கள் என்ற அச்சம் எங்களிடம் உள்ளது. அதனால் மக்களை விழிப்படையச்செய்வதுடன் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும்அழுத்தங்களைக்கொடுப்பது இதன் பிரதான நோக்கமாகும்.

கட்சி பேதங்கள் இல்லாமல் பாலமுனைப் பிரகடனத்திற்கு அனைவரையும் பகிரங்கமாக அழைக்கின்றோம். முஸ்லிம்களின் வாக்குகளைப்பெற்று அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களது நலன்களை முதன்மைப்படுத்தி சமூக உரிமையை காட்டிக்கொடுக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தினதும், நாட்டு மக்களினதும் உரிமையையும், ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் விரும்புகின்ற கட்சியாகும். அந்த வகையில் பாலமுனைப் பிரகடனத்தை ஏற்பாடு செய்துள்ளது.

என்றுமில்லாதவாறான பேராபத்திலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுவோம்.

மூவின மக்களும் ஒன்று சேர்ந்து வாழும் முறைமைக்கு வித்திடுவோம்.

கழுகுகளின் கொத்துக் குதறல்களுக்கு இடம்கொடாமல், முஸ்லிம் சமுதாயத்தின் அபிலாசைகளை வென்றெடுப்போம்.

இவற்றுக்காய் வீரிய விதை நட்டு, நம்நாடும் மக்களும் – சர்வதேசமும் அறிந்திட பாலமுனையில் முழக்கமிட்டு பிரகடனம் செய்வோம். என்றார்.

# காதலித்து ஏமாற்றிய இளைஞனுக்கு 10 வருட கடூழிய சிறைவாசம்

## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

வவுனியா, ஒக்.28

16 வயதுக்கு குறைந்த சிறுமியைக் காதலித்து வன்புணர்வு புரிந்த குற்றத்துக்காக முல்லைத்தீவு இளைஞனொருவருக்கு வவுனியாமேல்நீதிமன்றம் இன்று 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

முல்லைத்தீவு, மாங்குளம், ஒலுமடு பிரதேசத்தைச் சேர்ந்த நாகராசா ஜெகதீஸ்வரன் (வயது 23) என்ற இளைஞன் 2011 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் நவம்பர் மாதங்களில்பெண்பிள்ளை ஒருவரைக் காதலிப்பதாகக் கூறி அவரைக் காதலித்து ஏமாற்றி வன்புணர்ந்து ஒரு குழந்தைக்கு தாயாக்கியுள்ளார்.

இதனையடுத்து அந்த இளைஞன் தன்னை திருமணம் முடிப்பார்என காத்திருந்த பெண், அவர் வேறு திருமணம் முடித்து விட்டார் என்பதனை அறிந்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து அந்த நபரைக் கைது செய்த முல்லைத்தீவு பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று கடந்த 24. 08. 2017 ஆம் திகதியன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பகிர்வு பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று சாட்சியங்கள் மன்றினால் பரிசீலிக்கப்பட்டு நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் அந்த இளைஞன் 16 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளையை காதலிப்பதாகத் தெரிவித்து வன்புணர்ந்தமைக்கு 10 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன் பிறந்த குழந்தைக்கு மூன்று லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறும் அதைச் செலுத்தத் தவறின் 2 வருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் தண்டப்பணமாக பத்தாயிரம் ரூபாவை செலுத்துமாறும் அதை செலுத்த தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க நேரிடும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் அரச தரப்பில் அரசசட்டவாதிமாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தியிருந்தார்.

# பரிசளிப்பு விழாக்கள்

அச்சுவேலி, ஒக். 28

அச்சுவேலி, இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, இன்று பிற்பகல் 2 மணிக்கு, பாடசாலை திறந்த வெளியரங்கில் அதிபர் கே.வாகீசன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக உயர்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளரும், பழைய மாணவருமான வ.சிவகுமார் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் சி.கோமதி ஆகியோர் கலந்து கொள்வர்.

★ ★ ★

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9 மணியளவில், அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி தி.சந்திரசேகரன் கலந்து கொள்வார். நிறுவுநர் நினைவுப் பேருரையை குடத்தனை அ.த.க.பாடசாலை அதிபர் கே.குகநாதன் நிகழ்த்துவார். பரிசில்களை பருத்தித்துறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வதனா சந்திரசேகரன் வழங்குவார். (இ)

'போதைப்பொருள் அற்றநாடு'

# சங்கானையில் இன்று விழிப்புணர்வு

சங்கானை, ஒக். 28

'போதைப்பொருள் அற்ற நாடு' என்ற தொனிப்பொருளில் அமைந்த விழிப்புணர்வு வேலைத்திட்டம் சங்கானை காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் சங்கானைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெறவுள்ளது. (இ)

# நீதித்துறையினர்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதி வழங்காமல் நீங்கள் தவிர்க்க முடியாது.

"குற்றச்சாட்டுக்கு இலக்கான எதிர் மனுதாரர்களில் இருவர் இந்த நீதிமன்றத்தின் நீதியரசர்கள். அது உண்மைதான். நேரடியாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரதி மற்றும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல்கள் உங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் நண்பர்கள் தாம். ஆனால், அதற்காக நாம் அவர்கள் மீதான குற்றச்சாட்டைச் சுமத்தாமல் தவிர்த்து நிற்க வில்லையே. சட்டம் தனது கடமையைச் செய்ய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்." – என்றார் சுமந்திரன்.

அவரது வாதத்தை ஏற்ற நீதியரசர் சிசிர டி ஆப்ரூ, தாம் இந்த வழக்கிலிருந்து விலகியிருக்கவே விரும்புகின்றார் என்றும், எனினும் இவ்வழக்கை விசாரிப்பதற்கு போதிய நீதியரசர்கள் இல்லை என்ற நிலை வருமானால், தான் அதனை விசாரிப்பார் என்றும் அவர் சொன்னார்.

மூன்றாவது நீதியரசரான விஜித் மலால்கொடவும் தமது பக்கக் கருத்தை முன்வைத்தார்.

"சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து நேரடியாக நீதியரசர் குழாமுக்குக் கடைசியாக வந்துசேர்ந்தவன்நான்தான். அதனால் இந்த வழக்கின் எதிர்மனுதாரர்கள் பலரும் எனது பழைய நண்பர்களே. ஆனாலும் அதற்காக நான் நீதி முறைமையைத் துவள விடமாட்டேன். நான் இந்த வழக்குகளை விசாரிப்பதற்குத் தயார்" – என்றார் அவர்.

நீண்ட வாதங்களின் பின்னர் இந்த வழக்கை விசாரிக்க இணங்கும் நீதியரசர்களை ஒன்றிணைக்கும் ஆயம் ஒன்றை பதிவாளர் ஏற்படுத்தி, வழக்கை மீண்டும் நவம்பர் 10 ஆம் திகதி அந்த ஆயத்தின் முன்னால் அழைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

உயர்நீதிமன்ற நீதியரசர் குழாமில், மேற்படி வழக்கில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் – பிணைமுறி ஊழல் சர்ச்சை குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினர்களான – இரு நீதியரசர்களையும் தவிர்த்து வேறு எந்த நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் முன்னாலும் இந்த வழக்கு விசாரிக்கப்படுவதில் தங்களுக்கு ஆட்சேபனை கிடையாது என மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி சுமந்திரனும் அரச சார்பில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பர்ஸானா ஜமீலும் நீதிமன்றில் தெரிவித்தனர்.

மனுதாரர்சார்பில்சட்டத்தரணிகள் நிரான் அங்கிட்டல், செல்வி அருளானந்தம், திருமதி குறைசெர் தம்பையா ஆகியோர் ஆஜரானார்கள். (உ)

# முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளம்ஊடாக அறிவித்திருக்கின்றார்.

மேற்படிடி.பி.எஸ். ஜெயராஜின் மூலச் செய்தியை அப்படியே அவரையும், அவரது இணையத்தளத்தையும் மேற்கோள்காட்டி 'விக்கி, அவர் ஆலோசகர் நிமலன் மீது ஐம்பது லட்சம் ரூபா மோசடிக் குற்றச்சாட்டு; நிதிக் குற்றப் பொலிஸிடம் முறையிட கனேடியத் தமிழர்கள் தயாராகின்றனர்' என்ற தலைப்பில் முன்பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்து கடந்த ஜுன் 20ஆம் திகதி 'காலைக்கதிர்' முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் இவ்விடயத்தை ஒட்டி கனேடியத் தமிழர் சமூக மையம் நிலைமையைத் தெளிவுபடுத்தி வெளியிட்ட அறிக்கை ஜுன் 23 ஆம் திகதி 'காலைகதிர்' முன்பக்கத்தில் 'விக்கியின் கனடா வருகையின் போது திரட்டப்பட்ட நிதி இன்னமும் இங்கு அனுப்பப்படவில்லையாம்; கனேடிய தமிழர் சமூக மையம் அறிக்கை' என்ற தலைப்பில் பிரசுரமாகியது.

மூலச்செய்தியை வெளியிட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜ், அந்தச் செய்தியை தற்போது வாபஸ் பெற்று மன்னிப்புக் கோருகின்றமையால், அந்த மூலச் செய்தியை அவரை மேற்கோள்காட்டிப் பிரசுரித்த 'காலைக்கதிர்' அதே முக்கியத்துவம்கொடுத்து இப்போதைய விடயத்தையும் பிரசுரிக்கிறது.

இவ்விடயம் தொடர்பில் கனேடிய தமிழர் சமூக அமையம் இப்போது வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

கடந்த ஜனவரி மாதம் வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனின் வருகையின் போது நடைபெற்ற நிகழ்வுகளில் முதலமைச்சருடன் ஒரு மாலை என்கின்ற விருந்து நிகழ்வும் ஒன்றாகும். இந்நிகழ்வின் மூலம் பெறப்பட்ட நிதியில் முதலமைச்சரதும் அவரது குழுவினதும் வருகை மற்றும் நிகழ்வுக்கான செலவுகள் போக மீதியானது முதலமைச்சர் முன்னெடுக்கும் மக்களுக்கான உதவித் திட்டங்களுக்கு கையளிப்பதற்காக இந்நிதிசேர் நிகழ்வு நடத்தப்பட்டது. இந் நிதிவிடயங்களின் கணக்கு விவரங்கள் கனடிய தமிழர் சமூக அமையத்தினால் மக்களுக்கு கிடைக்கும் வகையில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இந்நிதியானது முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசகர் நிர்மலன் கார்த்திகேயன் அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் மக்களுக்கான உதவித்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதியினை நிர்மலன் கார்த்திகேயன் அவர்கள் தவறாகக் கையாண்டார் எனவும், அதனடிப்படையில் இலங்கையின் பண மோசடிக் குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனும் தலைப்புடன் உண்மைக்குப் புறம்பான செய்திக் கட்டுரை ஒன்றை திரு. டேவிட் பியூல் சபாபதி ஜெயராஜ் (David Buell Sabapathy Jeyaraj) அவர்கள் தனது இணைய வலைத்தளத்தில் வெளியிட்டிருந்தார்.

சமகாலத்தில், இலங்கையின் வடமாகாண சபையின் சில அமைச்சர்கள் மீதான ஊழல் விசாரணை நடவடிக்கைகள் முதலமைச்சரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட இன்னும் சிலரும் இணைந்து முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்கள். இவ்வாறான முதலமைச்சருக்கு எதிராக விடயங்கள் முன்னெடுக்கப்பட்ட ஒரு சூழலில் வெளியிடப்பட்ட இச் செய்திக் கட்டுரையானது அந்தச் சூழலை மேலும் குழப்பிய ஒன்றாகவே பலராலும் பார்க்கப்பட்டது.

இவ்வாறு உண்மைக்குப்புறம்பான செய்தியைப் பிரசுரித்தமையானது முதலமைச்சர் மற்றும் அவரது ஆலோசகர் உட்பட இவ்விடயங்களை முன்னெடுத்து நடத்திய சமூக அமைப்பான கனடியத் தமிழர் சமூக அமையத்தினரதும் முதலமைச்சர் வருகைக்கான ஏற்பாட்டுக் குழுவில் இணைந்து இயங்கிய அனைத்து அமைப்புக்களின் நம்பகத்தன்மையையும் கேள்விக்குட்படுத்தியது.

இதனடிப்படையில் இவ்விடயம் தொடர்பாக திரு. டி.பி.எஸ். ஜெயராஜ் அவர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட தரப்பினரால் சட்ட நடவடிக்கை ஒன்று கனடாவில் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சட்ட நடவடிக்கையின் பரஸ்பரத் தீர்வாக திரு. டி.பி.எஸ் ஜெயராஜ் அவர்கள் தான் இழைத்த தவறை ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கோருதல் உட்பட எமது நிபந்தனைகளுடன் உடன்படுவதான தீர்மானம் எட்டப்பட்டதற்கு அமைவாக அவர் தனது இணையத்தளத்தில் தவறுக்கான மன்னிப்புக் கோருதலுடன் அத்தவறான செய்தியையும் மீளப்பெறுகின்றார்.

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் தமது செய்திகள், ஆக்கங்கள் மற்றும் மறுபிரசுரவிடயங்களில் அவற்றைப் பிரசுரிக்க முன்னர், அவை தொடர்பிலான உண்மைத் தன்மையை ஊடகதர்மம் சார்ந்து உரியவிளக்கம்பெற்றுமக்களுக்கு எடுத்துச் சென்று தமது நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

அதேவேளை, பல ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் மேற்சொன்ன விடயம் தொடர்பாக எம்மை அணுகி விடயங்களின் உண்மையையும், அதன் தரவுகளையும் பிரசுரித்திருந்தமையை சுட்டிக்காட்ட விரும்புவதுடன் அதற்கான நன்றியையும் தெரிவிக்க விரும்புகின்றோம். – என்று உள்ளது. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதியரசர்களை நீதியின் முன் நிறுத்தும் அடிப்படை உரிமை மனு

இறைமை குறித்து அதிகம் பேசுகிறோம். மக்களின் இறைமை மூன்று அடிப்படைகளைக் கொண்டது என்று நமது அரசமைப்பே கூறுகின்றது. அவை: வாக்குரிமை, அடிப்படை உரிமைகள், ஆட்சித்துறை அதிகாரங்கள்.

இறைமையின் அடிப்படைக் கூறான அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்பு இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. அதை யாரும் மறுக்க முடியாது. அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அதற்கு நிவாரணம் பெறுவதற்கான ஏற்பாடுகள் அரசமைப்பிலேயே உள்ளன.

அடிப்படை உரிமைகள் மக்களின் இறைமையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை என்றமையால், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பு நாட்டின் கீழ் நிலை நீதிமன்றங்களுக்கு வழங்கப்படாமல், நாட்டின் உச்ச நீதிமன்றமான உயர்நீதிமன்றுக்குப் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அப்படிப்பட்ட அடிப்படை உரிமை மீறலுக்காகத் தமிழ் இளைஞர் ஒருவர் - அரச ஊழியர் - நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியிருக்கின்றார். அவருக்கு நீதி வழங்குவதற்கு நீதியரசர்களைத் தேடும் நிலைமை உருவாகியிருக்கின்றது. அதுவும் உயர்நீதிமன்றத்தில் உள்ள சுமார் பத்து நீதியரசர்களில் யார் யார் அவரது குறையைக் குறைந்தபட்சம் நீதிமன்றத்தில் அமர்ந்திருந்து செவிமடுக்கத் தயார் என்பதை இனித்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

அத்தகைய விநோதமான - விபரீதமான - அடிப்படை உரிமை மீறல் மனுவாக இலங்கை மத்திய வங்கியின் இளம் ஊழியரான பதுமநாபனின் (பதுமனின்) வழக்குக் கட்டவிழ்ந்திருக்கின்றது.

இப்படி நீதியரசர்களைத் தேட வேண்டிய நிலைமை உருவானதற்குக் காரணங்கள் உள்ளன.

வழக்கை விசாரிக்க வேண்டிய நீதியரசர்களும், வழக்காட வேண்டிய சிரேஷ்ட அரச சட்டத்துறையினரும் இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாக ஆஜராக வேண்டி இருக்கின்றமையே இந்த நிலைமைக்குக் காரணம்.

பிணை முறி விவகாரம் தொடர்பாக இடம்பெற்றவை எனக் கூறப்படும் ஊழல்களுக்கும் மத்திய வங்கிக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய முற்பட்ட அரசு, அதற்காகச் செய்த ஏற்பாடே இப்போது பெரும் சட்டக் குழப்பத்தை உருவாக்கியுள்ளது.

இந்த விடயத்தை விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்த அரசு, தற்போது உயர்நீதிமன்றத்தில் பதவியிலிருக்கும் இரண்டு நீதியரசர்களை அதற்கான மூன்று ஆணையாளர்களுள் இருவராக நியமித்தது.

அந்த ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு என - அதன் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவென - சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து - பல மூத்த அதிகாரிகளைக் கொண்ட ஓர் அணியையும் அரசு நியமித்தது.

அங்குதான் தவறு நேர்ந்திருக்கின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளின் பணி வேறு. அவர்கள் வழக்காடுபவர்கள்; சட்டத்தரணிகள். அரச அதிகாரிகளும் பிறரும் இழைக்கும் சட்டத் தவறுகளைக் கையாளுபவர்கள். அவர்களின் பணி, புலன் விசாரணையாளர்களின் வேலையல்ல. புலன் விசாரணை நடத்துகின்ற பொலிஸார் போன்ற தரப்பினரின் சட்ட விடயங்களைக் கவனிக்கும் தரத்தில் இருக்கின்றவர்கள்.

சட்டத்தைக் கையாள்பவர்களாக, வியாக்கியானம் செய்பவர்களாக அவர்கள் - சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் - இருக்கின்றமையால்தான், இலங்கையின் மேனிலை நீதிமன்றங்களுக்கான நீதியரசர்களை நேரடியாகச் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்தும் நியமிக்கும் பாரம்பரியம் - வழக்காறு - இருந்து வருகின்றது.

அந்த நிலைமையை உதாசீனம் செய்து, சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து - சொலிஸிட்டர் ஜெனரல் தரத்தில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் குழுவினரை, புலன் விசாரணையாளர்கள் போன்ற தரத்துக்கு அரசு நியமித்து சிக்கலை விலைக்கு வாங்கியிருக்கின்றது.

இந்த அதிகாரிகள், பிணைமுறி விவகாரத்தை அம்பலப்படுத்துகின்றோம் என்று கறுவிக்கொண்டு பொலிஸாரிலும் விட மூன்றாம் தரத்துக்கு மோசமாக நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது இந்த விடயத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர் என்று கூறப்படும் - மத்திய வங்கியின் இளம் ஊழியரான - தமிழர் பதுமநாபனின் குற்றச்சாட்டு.

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு உதவி அளிக்கும் அதிகாரிகள் என்ற பெயரில் நியமனம் பெற்ற சட்டமா அதிபர் திணைக்களத்தினர் இழைத்த தவறுகள் என்பதால் - ஆணைக்குழுவின் மூலம் கிடைத்த அதிகாரத்தை அவர்கள் பிரயோகிக்கின்றனர் என்பதால் - அந்த வழக்கில் ஆணைக்குழு உறுப்பினர்களையும் எதிர்மனுதாரர்களாகச் சேர்க்கும் நிலைமை வந்துவிட்டது.

பொலிஸ்காரர்கள் மீது சுமத்தப்படுகின்றமை போன்ற சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் இப்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயரதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒரு பெரிய சட்ட சர்ச்சையே உருவாகியிருக்கின்றது.

இந்த அதிகாரிகள் ஒரே சமயத்தில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளாகவும் -

மறுபுறம் பொலிஸ் அதிகாரிகள் போல ஜனாதிபதி ஆணைக்குழுவின் புலன் விசாரணையாளர்களாகவும் -

செயற்படுகின்றமை அதிகார கருத்து நிலை நோக்கு முரண்பாட்டை (Conflict of Interest) தோற்றுவித்திருக்கின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றம் உரிய நீதியரசர்களைத் தேடிக் கண்டுபிடித்து, விசாரணை நடத்துமானால் இந்த சட்ட சர்ச்சைக்கு சுவையான - சட்ட சுவாரஸியமான - ஒரு தீர்ப்பை அது வழங்கும் என எதிர்பார்க்கலாம்.

# புதிய அரசமைப்புக்கு எதிராக கொலைகாரர்கள் போர்க்கொடி!

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



இலங்கையின் புதிய அரசமைப்புக்கு எதிராக கொலைகாரர்கள் திரண்டுள்ளனர் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் 63 லட்சம் மக்கள் நாட்டின் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட வேண்டுமென அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில் புதிய அரசமைப்புக்கு ஆதரவாகச் செயற்படுவோரை கொலை செய்யவேண்டுமென கோட்டாபயவுக்கு ஆதரவான அமைப்பு கூறிவருகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உலகின் நம்பிக்கையை வென்று ஜனநாயக ரீதியான பயணமொன்றை ஆரம்பித்துள்ளமையை ஏற்றுக்கொள்ளமுடியாத தரப்பினர் இவ்வாறு குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அண்மையில் கோட்டாபயவின் அமைப்பான வியத்மக அமைப்பைச் சேர்ந்த முன்னாள் இராணுவப் படையதிகாரி, புதிய அரசமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் தரப்பினரைக் கொலைசெய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஜனநாயகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத வெறிபிடித்த சிலர் இவ்வாறு கடுமையான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கிய கோட்டாபயவின் இரத்தவெறி இன்னும் அடங்கவில்லை. அதன் காரணமாகவே இவ்வாறான அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரச அதிகாரமற்ற நிலையில் பொது மேடைகளில் இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்க முடியும் என்றால் அரச அதிகாரம் இருந்த காலத்தில் இவர்கள் எவ்வாறு செயற்பட்டிருப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அபிருத்தியடைந்துவரும் உலகுடன் இணைந்து இலங்கையும் பயணிக்க வேண்டும்: பிரதமர்!



தொழில்நுட்பத்துடன் அபிருத்தியடைந்துவரும் உலகுடன் இணைந்து இலங்கையும் பயணிக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

13 வருடகால பாடசாலை கல்வியை கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக பின்லாந்தின் கல்வி முறையை ஆராய்ந்திருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

கொழும்பு தேவி பாலிக்கா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சவாலை வெற்றி கொள்வதற்கு நாட்டை பலப்படுத்தப் போகிறார் எனத் தெரிவித்த பிரதமர், இன்று இலங்கையின் சகல துறைகளையும் நவீனமயப்படுத்தும் வேலை ஆரம்பமாகி உள்ளது. நவீனமயப்படுத்தலுடன் இணைந்து பயணிப்பதுஅவசியம்.அதிலிருந்து விலகிச்செல்லமுடியாதென்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் மஹிந்த கலந்துகொள்வது பற்றிய தீர்மானம் நாளை!

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் கலந்து கொள்கின்றமை தொடர்பாகக் கூட்டு எதிர்க்கட்சியின் விசேட கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளை இடம்பெற உள்ள கூட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் கலந்துகொள்கின்றமை தொடர்பாகவும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பல தீர்மானங்கள் எட்டப்பட உள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் கலந்துரையாடல் எதிர்வரும் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நவம்பரில் பெரும் எதிர்ப்பு போராட்டம்: ஜி.எல்.!

கொழும்பு, ஒக். 28

தேர்தலை இதன் பிறகும் ஒத்திவைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் எதிர்வரும் நவம்பர் முதல் பெரும் எதிர்ப்பு நடவடிக்கையை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்போகிறோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அரசின் நடவடிக்கையை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்கவுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி - 2017

மார்பகப் புற்றுநோயை ஆரம்பநிலையிலேயே, இனங்காண்பதற்குச் சுயமார்பகப் பரிசோதனை, பிணியாய நிலைய மார்பகப் பரிசோதனை, மார்பகக் கதிர்ப்படம் (Mammogram) சோதனை போன்ற முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில், சுயமார்பகச் சோதனையை மாதம், மாதம் செய்து வருதல் மிக முக்கியமான, இலகுவான சோதனை முறையாகும்.



Be Breast Aware

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

29.10.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : அவிட்டம் பி.இ. 4.15 வரை
திதி : நவமி பி.ப. 3.02 வரை
சுபநேரம் : 9.03 – 10.33 வரை
இராகுகாலம்: 4.03 – 6.33 வரை

# வழக்குகளை வவுனியாவுக்கு மாற்றக் கோரி 3 கைதிகள் மேல்முறையீட்டு நீதிமன்றில் மனு!

கொழும்பு, ஒக். 28

அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த ஒரு மாதமாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகளும், தமக்கு எதிரான வழக்குகளை மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றத் துக்கு மாற்ற வேண்டும் எனக் கோரி, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

அனுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ள தமது வழக்குகளை மீண்டும் வவுனியா மேல்நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிடக் கோரி, இராசதுரை திருவருள், சுலக்சன், கணேசன் தர்சன் ஆகிய மூன்று தமிழ் அரசியல் கைதிகளும், நேற்று முன்தினம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு எதிரான சாட்சிகளாக 67 பேர் பெயரிடப்பட்டுள்ளனர். அவர்களில் 64 பேர் இலங்கைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினராவர்.

சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறி, இவர்களின் வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் அனுராதபுர மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன.

இதனை எதிர்த்து, அவர்கள் கடந்த ஒரு மாதமாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற போதிலும், இலங்கை அரசு, வழக்குகளை மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மேல்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ள மூன்று அரசியல் கைதிகளும், அனுராதபுரத்தில் எமக்கு எந்த உறவினர்களோ நண்பர்களோ இல்லை. எமக்குத் தமிழ் மொழி மட்டுமே பேச முடியும். இதனால் அனுராதபுர நீதிமன்றத்தில் வழக்குகளை நாம் எதிர்கொள்வதும், எமக்கான சட்டவாளரைப் பெறுவதும் கடினம்.

எனவே அனுராதபுர மேல் நீதிமன்றத்தில் நியாயமான விசாரணை நடக்காது என்று நம்புகிறோம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களமும், குற்றப் புலனாய்வுப் பிரிவும் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர்.



# இரு மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 28

தற்பொழுது நிலவும் கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இரு மாவட்டங் களுக்கு மண்சரிவு தொடர் பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவிக்கையில்-

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியுடனான 24 மணித்தியால காலப்பகுதியில் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் 75 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி பதிவானது.

இதனைத் தொடர்ந்து தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தால் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் 24 மணித்தியாலங்களுக்கு கண்டி மாவட்டத்தில் மததும்பற பிரதேச செயலக பிரிவுக்கும் உடதும்பர பிரதேச செயலக பிரிவிற்கும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் ஹங்குரான்கெத்த பிரதேச செயலக பிரிவும் அதன்சுற்றுப்புறங்களிற்கும் மண்சரிவு தொடர் பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மண்சரிவு தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேச அனர்த்த வலயத்தில் வாழும் மக்கள் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் பட்சத்தில் கூடுதலான கவனத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(க)

# பாடசாலை மாணவர்களுக்கு சத்துள்ள உணவு வழங்கல்!




கொழும்பு, ஒக். 28

பாடசாலை மாணவர்களுக்கு சத்துள்ள பகல் உணவை வழங்குவதற்கு நாம் எதிர்பார்த்திருக்கிறோம் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வி நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில், மாணவர்களுக்குப் பகலுணவை வழங்க வேண்டும் என்பது தமது நீண்டகாலக் கனவாகும். இந்த கனவை நனவாக்குவதற்காக ஊழல் மற்றும் முறைகேடுகளை கல்வி அமைச்சில் இல்லாதொழித்து அதன்மூல மான நிதியை இதற்கு பயன் படுத்த தாம் எதிர்பார்த்திருக்கிறோம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த ஆலோசனையை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் சமர்ப்பிப்பதற்குத் நாம் எதிர்ப்பார்த்துள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

(க)

# இத்தாலிய தூதுவரைச் சந்தித்தார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்!



கொழும்பு, ஒக். 27

இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் போலோ அண்ட்ரியா பார்டோரெல்லி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவைச் சந்தித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில், இத்தாலிய தூதுவர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கிடையில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த சிநேகபூர்வ கலந் துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வீடமைப்பு திட்டங்களுக்கு இந்தியா 60 கோடி ரூபா நிதி!



கொழும்பு, ஒக். 28

இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா 60 கோடி ரூபாவை வழங்கியிருப்பதாக வீட மைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிரிபோபுர பிரதேசத்தில் ‘சந்தோஷகம’ என்ற பெயரிலான 44 ஆவது கிராமம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வின்போது இந்தியாவும் இலங்கையும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

இதற்கான உடன்படிக்கையின் கீழ் 1200 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 600 வீடுகள் தென்மாகாணத்திலும், ஏனைய வீடுகள் 25 மாவட்டங்களிலும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராம சக்தி மாதிரி கிராம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் பங்களிப்போடு வீடுகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் பதற்றம்; பாதுகாப்புக்காக பொலிஸார் குவிப்பு!








மட்டக்களப்பு, ஒக். 28

வாழைச்சேனையில் இரு இனங்களுக்கிடையில் இடம் பெற்றுவரும் வாக்கு வாதத்தால் பெரும் பதற்றம் நிலவியது எனத் தெரியவருகிறது.

பஸ்தரிப்பிடம் ஒன்றைக் கட்டுவதற்கு வாழைச்சேனை பெற்றோல் நிலயத்துக்கு அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் நேற்று முன்தினம் அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிலையில், வாழைச்சேனையில் சகோதர இனத்தவர்கள் அந்த அத்திபாரத்தை மூடிவிட்டு, அதன் மேல் அவர்களது முச்சக்கர வண்டிகளை நிறுத்தி இங்கே பஸ்தரிப்பிடம் கட்ட அனுமதிக்க மாட்டோம் என எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், இந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப் பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## அரச உத்தியோகத்தர் மீது வாழைச்சேனையில் தாக்குதல்!



மட்டக்களப்பு, ஒக். 28

வாழைச்சேனை கோறளைப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கே.சுகிர்தரன் என்பவர் மூவரால் தாக்கப்பட்டு தாயாருடன் வாழைச்சேனை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.கிண்ணையடி துறையடி வீதியில் மீள்குடியேற்ற வீட்டுத்திட்டத்தில் தாயொருவருக்கு வீடு வழங்கப்பட்ட டுள்ளது.

எனினும், அந்தத் தாய் மரணமடைந்துள்ளதால் அந்த வீட்டினை மரணமடைந் தவரின் பிள்ளைகள் இருவர்தங்களுக்கு வேண்டுமென தனித்தனியே உரிமை கோரி உள்ளனர்.

இந்த நிலையில், இவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கிராம சேவை அதிகாரியுடன் அபிவிருத்தி உத்தியோகத்தரும் சென்றுள்ளார்.

இதன்போதே அந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த தாயின் மகனும், பேரனும், மற்றுமோர் உறவினருமாக மூன்று பேர் சேர்ந்து தாக்குதல் நடத்தியதில் இந்த உத்தியோகத்தரின் தலையில் காயம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காயமடைந்த உத்தியோகத்தர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாலைமர தீராந்திகளை ஏற்றிச் சென்ற மூவருக்கு அறுபதாயிரம் ரூபா தண்டம்!

கிளிநொச்சிப் பகுதியில் பாலைமர தீராந்திகளை ஏற்றிச் சென்ற மூன்று சந்தேகநபர்களுக்கு தலா அறுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் ஒரு லட்சத்து 65 ஆயிரத்து 612 ரூபா பெறுமதியான பாலைமர தீராந்திகளை உழவு இயந்திரத்தில் கொண்டு சென்ற மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், சந்தேகநபர்கள் மூவரும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், மூவருக்கும் தலா அறுபதாயிரம் ரூபாதண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

## தாய் நாட்டுக்காக அதிகபட்ச அர்ப்பணிப்பை செய்வேன்



புதிய கடற்படைத் தளபதி!

தாய் நாட்டின் இறைமை ஆள்புல ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாப்பதற்கு கடற்படையின் சார்பில் முழுமையானதும் சரியானதுமான தலைமைத்துவத்தை வழங்கத் தயாராக உள்ளேன் எனப் புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியை நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 22ஆவது கடற்படைத் தளபதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் உரையாற்றுகையில் இதனைக் கூறியுள்ளார்.

கடல் மார்க்கமாக ஏற்படும் சகல அச்சுறுத்தல்களிலிருந்து தாய் நாட்டைப் பாதுகாக்கவும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டியது கடற்படைத் தளபதி என்ற வகையில் தன்மீது சுமத்தப்பட்டுள்ள பெரிய பொறுப்பாகும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## ஸ்மார்ட் தேசிய அடையாள அட்டை நேற்று முதல் விநியோகம்!

கொழும்பு, ஒக். 28

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பின் முதற்கட்ட நடவடிக்கையாகத் தற்காலிக இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பித்துள்ளது என ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் வரையில் தற்காலிக இலத்திரனியல் அடையாள அட்டைகளைப் பயன்படுத்த முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய அடையாள அட்டைகள் உள்ள வர்கள் இவ்வாறு வழங்கப்படும் தற்காலிக இலத்திரனியல் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தில்லை என ஆட்பதிவு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

# இன்று மாலை கொழும்பில் கூடுகிறது கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று மாலை 6 மணிக்கு கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பாக இடைக்கால அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு நாடாளுமன்றக் குழு கூட்டத்தை கூட்டுவதற்கு முன்னதாக ஒருங்கிணைப்புக் குழுகூட்டத்தைக் கூட்டி, கூட்டமைப்பாக கொள்கை ரீதியான தீர்மானமொன்றைமேற்கொள்ள வேண்டும் என அதன் அங்கத்துவக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்.வலியுறுத்தியிருந்தது.

அத்துடன், கடந்த 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறவிருந்த நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை எனவும் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் ஐ.நா. விசேட அறிக்கையாளரின் நாடாளுமன்ற வருகை மற்றும் அரசமைப்பு குறித்த சந்திப்புக்கள் இருந்ததன் காரணமாக கடந்த 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நாடாளுமன்றக் குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அவ்வாறான நிலையிலேயே, தற்போது மேற்படி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். உட்பட பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோ ஆகியனவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளமையை அந்த அமைப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதேவேளை, இன்றும் நாளையும் காலை 9.30மணி முதல் மாலை 4 மணிவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் புதிய அரசமைப்புக்கான வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் சந்தேகங்கள், புதிதாக இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பற்றிய யோசனைகள் போன்றவற்றை முன்வைக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் அரசமைப்புச் செயற்பாடுகளில் பங்கேற்றுள்ள தமிழ் மொழி சார் சட்டத்தரணிகள் சிலர் பங்கேற்று விளக்க உரைகளை ஆற்றவுள்ளனர் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் வழிநடத்தல் குழு உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அறிக்கை தொடர்பாக மேலதிக தெளிவுபடுத்தல்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இதேநேரம், இந்த இரு நாள் கருத்தரங்கில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ஈ.பி.ஆர்எல்.பங்கேற்கமாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மையமாக வைத்து தீர்மானத்தை எடுத்துள்ள நிலையிலும் இடைக்கால அறிக்கை பற்றி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் ஏகோபித்த தீர்மானம் ஒன்று எட்டப்படாத நிலையிலும் இத்தகைய கருதரங்கில் பங்கேற்பதால் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை எனவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் எதிர்வரும் 30, 31 மற்றும் நவம்பர் முதலாம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவுக்குச் செல்கிறார் வெளிவிவகார அமைச்சர்!



இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நாளைய தினம் சீனாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தைமேற்கொள்ள உள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யியின் அழைப்பை ஏற்று இலங்கை வெளிவிவகார அமைச்சர்திலக்மாரப்பன, எதிர்வரும் ஒக்ரோபர் 29 ஆம் திகதி முதல்நவெம்பர் 4 ஆம் திகதி வரை, சீனாவில் அதிகாரபூர்வ பயணத்தைமேற்கொள்ள உள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் நேற்றுமுன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது திலக் மாரப்பனவின் சீனாவுக்கான முதலாவது அதிகாரபூர்வ பயணம். அவரது பயணத்துக்கு சீனா முக்கியத்துவம் அளிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனத் தலைவர்கள் திலக் மாரப்பனவைச் சந்திக்கவுள்ளனர். இருதரப்பு உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு60ஆண்டுகள்நிறைவடைவதைக் கொண்டாடும்நிகழ்வுகளிலும்அவர் பங்கேற்பார் என்றும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக் கடற்படையின் 22 ஆவது தளபதியாக பொறுப்பேற்றார் வைஸ் அட்மிரல் ரணசிங்க!





இலங்கையின் 22 ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க நேற்றுமுன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் நடந்த நிகழ்வில் அவர் கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்றார்.

முன்னதாக, ஓய்வுபெற்றுச் செல்லும் கடற் படைத் தளபதி அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா, கடற்படைத் தளபதிக்குரிய அதிகாரபூர்வ வாளை, வைஸ் அட்மிரல் ரணசிங்கவிடம் கையளித்தார்.

இதன் பின்னர், கடற்படைத் தளபதியாகப் பதவியேற்கும் ஆவணங்களில் கையெழுத்திட்டு, வைஸ் அட்மிரல் ரணசிங்க பதவியைப் பொறுப்பேற்றார்.

இதையடுத்து, அட்மிரல் சின்னையாவுக்கு கடற்படை மரபுகளுக்கமைய அணி வகுப்பு மரியாதையுடன் கூடிய வழியனுப்பும் நிகழ்வு இடம் பெற்றது.

# 10 ஆயிரம் தனி வீடுகளுக்கு இந்தியாவுடன் ஒப்பந்தம்!

கொழும்பு, ஒக். 28

இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் இலங்கை வருகை யின்போது அவர் அறிவித்த மலையக மக்களுக்கான 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்திய தூதுவராலயத்துக்கும் தமது அமைச்சுக்கும் இடையில் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது என மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்திய துணைத்தூதுவர் தலைமையிலான குழுவினருக்கும் அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் அமைச்சில் இடம் பெற்றது.

அமைச்சர் பழனி திகாம்பரத்துடன், அமைச்சின் செயலாளர் ரஞ்சனி நடராஜபிள்ளை, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.உதயகுமார் இந்திய தூதுக்குழு சார்பாக துணைத் தூதுவர் அரிந்தாம் பக்ஷி, இணைச் செயலாளர் அமித்குமார், முதன்மைச் செயலாளர் திருமதி சுஜா மேனன், தூதரக அதிகாரி தாஸ் ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கடந்த பல வருடங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த இந்திய வீடமைப்புத்திட்டம் நல்லாட்சி அரசில் அமைச்சர் திகாம்பரம் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சைப் பொறுப்பேற்றவுடன் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதுடன் தற்போது முதல் கட்டமாக 1134 வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இரண்டாவது கட்டமாக 2 ஆயிரத்து 866 வீடுகளுக்கான கட்டுமானப்பணிகள் எதிர்வரும் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த நிலையில், இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கை விஜயத்தின் போது நோர்வூட் மைதானத்தில் மலையக மக்களை சந்தித்து அவர் அறிவித்த 10 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடலா கவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கிடப்பில் போடப்பட்டிருந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக அமைச்சருக்கு நன்றி தெரிவித்த இந்திய தூதுக்குழு, எதிர்வரும் மூன்றாண்டு காலப்பகுதிக்குள் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் எஞ்சிய 10 ஆயிரம் வீடுகளையும் அமைக்கும் திட்டத்திற்கு பணிகளைத் தயார் செய்யுமாறும் அது தொடர்பான மேலதிக உதவிகளை வழங்குவதற்கு இந்திய அரசு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

ஏற்கனவே, 10 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்காக திட் டமிடல் திணைக்களத்தினதும் முகாமைத்துவ குழுவினதும் அனுமதி கிடைத்துள்ள அதேவேளை, இதற்கான அமைச்சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதனைத்தொடர்ந்து இந்திய தூதுவராலயத்துடன் அமைச்சு புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

# வாசிப்பு மாதத்தில் அனுபவப் பகிர்வு; இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 28

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு அனுபவப் பகிர்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொதுசன நூலக குவிமாட கேட்போர் கூடத்தில் இ.யேசுராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

'எனது வாசிப்பு அனுபவங்கள்' எனும் தலைப்பில் சத்திய நேசன் சற்குணம், செல்வி அகிழினி நந்தகுமார், சி.ரமேஸ் ஆகியோரும் 'நானும் எனது கவிதையும்' எனும் தலைப்பில் சோ.பத்மநாதன், சு.குணேஸ்வரன், பிரியந்தி அருமைத்துரை, த.அஜந்தகுமார், கு.ரஜீபன் ஆகியோரும் 'நானும் எனது சிறு கதையும்' எனும் தலைப்பில் கோகிலா மகேந்திரன் உடுவில் அரவிந்தன் ஆகியோரும் தமது அனுபவப் பகிர்வுகளைக் கலந் துரையாடவுள்ளனர். (இ)

## தினசரி ராசி பலன் 28.10.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 12 ஆம் நாள் சனிக்கிழமை. அஷ்டமித்திதி மாலை 4.41 மணிவரை. பின்னர் நவமி நட்சத்திரம்: திருவோணம் பி.இ. 5.02 மணிவரை. பின்னர் அவிட்டம் சித்தயோகம் மாலை 4.51 மணிவரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *காலை 8.57 மணிமுதல் 10.25 மணிவரை.*

**சுபநேரம்** - *மாலை 3.05 மணிமுதல் 4.35 மணிவரை.*

**திவசம்செய்ய வேண்டிய திதி**- *ஐப்பசிமாத வளர்பிறை அஷ்டமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *திருவோணம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகளால் சங்கடப்படுவார்கள். உத்தியோகத்தர்கள் வேலைகளை உடனே முடிக்கப் பாடுபடுவார்கள்.

**ரிஷபம்:** மகிழ்ச்சியான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். காணாமற்போன பொருள்கள் திரும்பக் கிடைக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக் கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்:** கவலையான நாள். பணவரவு குறையும். செலவுகள் அதிகரிப்பால் கடன்படநேரும். தொழி லில் பலராலும் இடையூறுகள் உண்டாகும். திரு மணப் பேச்சு தோல்வியில் முடியும்.

**கடகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பண வரவு சுமாராக இருக்கும். சுபச் செலவுகள் திடீர் பய ணங்கள் ஏற்படும். உடல் உபாதைகள் வந்து போகும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**சிம்மம்:** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். சகோதர வழியால் நன்மைகள் உண் டாகும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும்.

**கன்னி:** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் அனுசரணையால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். வியாபாரத்தை புது முதலீடு செய்து விரிவுபடுத்துவர்.

**துலாம்:** துயரமான நாள். வருமானம் குறையும். திடீர்ப் பயணங்களால் பணப்பற்றாக்குறையும் சோர் வும் வந்து நீங்கும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் கள் உண்டாகும்.

**விருச்சிகம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பணம் பற்றாக்குறையாக இருக்கும். திடீர்ச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலக் கோளாறுகள் உண்டாகும். வேலைச்சுமை அதிகரிக்கும்.

**தனுசு:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்ற மடையும். புது வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு நல்ல பதில் வரும். பிள்ளைகள் படிப்பில் அக்கறை காட்டுவார்கள்.

**மகரம்:** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். வியாபாரத்தில் மேலதிக லாபம் உண் டாகும். உத்தியோகத்தில் இவர்களின் கடின உழைப் புக்குப் பாராட்டுக் குவியும்.

**கும்பம்:** துன்பமான நாள். பணம் தட்டுப்பாடாக இருக் கும். சிலர் செய்யும் தொழிலை இழக்க வேண்டிவரும். சுயதொழிலில் ஆதாயம் குறையும். கொடுக்கல், வாங் கலில் சிக்கல்கள் உண்டாகும்.

**மீனம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். புதுவேலை கிடைக்கும். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். உத்தியோகத்தில் இவர்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

**சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3 ஆம், 4 ஆம் பாதங்கள், திருவா திரை, புனர்பூசம் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத் திரங்களில் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# அடிப்படை உரிமை மீறல் வழக்கும் கூட பிள்ளையானுக்கு கைகொடுக்கவில்லை!



கொழும்பு, ஒக். 28

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் எனப்படும், சிவநேசதுரை சந்திரகாந்த னின், அடிப்படை உரிமை மீறல் வழக்கை, 2018 மார்ச் 20ஆம் நாளுக்கு உயர்நீதி மன்றம் ஒத்திவைத்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் படுகொலை வழக் கில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான், தமக்குப் பிணை வழங்கப்படாமல் அடிப்படை உரிமை மீறப்படுவதாக, உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்றுமுன் தினம் நீதியரசர்கள் சிசிர ஆப்ரூ, பிரியந்த ஜெயவர்த் தன, விஜித் மலலகொட ஆகி யோரின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

இதன்போது பிள்ளையான் தரப்பில் முன்னிலையான, சட்டவாளர் சஞ்சீவ ஜெயவர்த் தன, தமது கட்சிக்காரர், 746 நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும், சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு மோசமாக நடத்தப்படுகிறார் எனவும் கூறினார்.

இதன்போது சட்டமா அதி பர் தரப்பில் முன்னிலையான, அரச சட்டவாளர், சுதர்சன டி சில்வா, ஜோசப் பரராஜசிங் கம் படுகொலை வழக்கில், பிள்ளையானுக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன் றத்தில் குற்றச்சாட்டு சுமத் தப்பட்டுள்ளது என்றும் தெரி வித்தார்.

இந்த வழக்கில் ஏழு பேர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட் டுள்ளது. பிள்ளையான் ஏழா வது எதிரியாகக் குறிப்பிடப் பட்டுள்ளார். இந்த வழக்கு வரும் நவம்பர் 6 ஆம், 7 ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, மட்டக் களப்பு மேல் நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கு முடிந்த பின்னர், 2018 மார்ச் 20 ஆம் திகதி இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை விசா ரிப்போம் நீதியரசர்கள் தெரி வித்துள்ளனர்.

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 26

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை -

**யாழ். பிரதேசத்தில்** காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை பொக்கணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன், புதர்மடம், கோப்பாய் சந்தி, இருபாலை, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ் நிலையம், பாற்பண்ணை திருநெல்வேலி, GPS றோட், திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, இராமலிங்கம் சந்தியிலிருந்து முடமாவடி, கிளிகடை வரை, புங்கனிச்சோலை, பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஷ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி ரயில் கடவையிலிருந்து தட்டாதெரு சந்தி வரை, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஒட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபுபக்கர் வீதி, கம்பஸ் லேன், தொழிநுட்பக்கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிரட், அண்ணா மலையான் சிறி இராகவேந்திரா என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிரட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி, கோப்பாய் இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல் லூரி, யாழ். பல்கலைக்கழக தங்கு விடுதி, இராஜேஸ்வரி திருமண மண்டபம் -

**கிளிநொச்சி பிரதேசத்தில்** காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை செல்வநகர், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம் -

**வவுனியா பிரதேசத்தில்** காலை 8 மணிமுதல் மாலை 5.30 மணிவரை மகாறம்பைக்குளம், தாஸபுநகர், பஸார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, இலுப்பை யடி -

ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

# சீன ஜனாதிபதிக்கு பிரதமர் வாழ்த்து!

கொழும்பு, ஒக். 28

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சீன நாட்டு ஜனாதிபதி சின் ஜின் பின்க்கு வாழ்த்துக் களைத் தெரிவித்துள்ளார்.

சீன நாட்டு ஜனாதிபதி சின் ஜின் பின் 2022 ஆம் ஆண்டு வரை சீனாவை ஆட்சி செய்வ தற்கு வாய்ப்பை பெற்றுள்ள மையே அடுத்தே வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

சீன நாட்டு ஜனாதிபதி சின் ஜின் பின் இரண்டாவது தட வையாகவும் ஆட்சிக்கு வந்தி ருக்கும் நிலையில், இரு நாட் டிற்கும் இடையிலான நட்பு மேலும் வளர்ச்சியடையும் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க எதிர்பார்க்கிறார் என பிரத மர் காரியாலயம் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

# கார்த்திகேசன் நினைவு நிகழ்வு

அமரர் தோழர் மு.கார்த்தி கேசனின் 40 ஆவது நினைவு தினக்கூட்டம் நாளை ஞாயிற் றுக்கிழமை யாழ். பொதுசன நூலக சிற்றுண்டிச்சாலை யில் மாலை 4 மணிக்கு நடைபெறும் என யாழ். சர்வதேச மார்க்சிய குழு தெரிவித்துள்ளது.

சொ.சிவபாலன் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ் வில் 'சமகால உலகில் சாதியத் தின வகிபாகம்' எனும் விடயம் குறித்து ஏ.சி.ஜோர்ஜ் உரை யாற்றுவார்.

இந்த நிகழ்வுக்கு ஆர்வலர் கள் அனைவரையும் வருகை தருமாறு யாழ். சர்வதேச மார்க் சிய குழு அறிவித்துள்ளது.

அரசியல் விமர்சகர் ரங்கஜய சூரியா 'Constitu tional obstruct ionism' என்ற தலைப்பில் 24.10.2017 இல் டெயிலி மிரர் நாளேட்டில் வரைந்துள்ள ஒரு கட்டுரையில்–

**வழிகாட்டல் குழுவின் இடைக் கால அறிக்கையில் இணைப் பாட்சி இல்லை, வடக்கு கிழக்கு இணைப்பில்லை பௌத்த மதத்துக்கு முதன்மை இடம் மற்றும் ஒற்றையாட்சியே தொடருகிறது எனத் தமிழர் தரப்பில் சிலர் கூச்சல் போடும்போது, இல்லை அரசு முன்வைத்துள்ள இடைக்கால அறிக்கை நாட்டைக் கூறுபோடுவதற்கான அடித்தளம் என்றும் அரசு அதனைக் கைவிடுமாறும் கேட்டுப் பௌத்த மத மகா நாயக்கர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளார்கள். இந்தக் கட்டுரை புதிய அரசமைப்புக்கு எதிராகப் பௌத்த பீட மகாநாயக்கர்கள் போடும் முட்டுக்கட்டை பற்றிக் கடுமையாகச் சாடுகிறது.**



# புதிய அரசமைப்புக்கு எதிராக மகா நாயக்கர்கள் கைகளில் சிவப்பு எச்சரிக்கைக் கொடி!

அண்மைக் காலமாக பௌத்த மத மகாநாயக்க தேரர்கள் அரசுக்குத் தொந்தரவு கொடுப்பதில் புனிதமற்ற பெருவிருப்பைக் காட்டுகிறார்கள். ஒருவேளை, இப்போதெல்லாம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து யாரும் தொலை பேசியில் அழைத்து மகா நாயக்க தேரர்கள் வழிக்கு வரா விட்டால் பௌத்த சங்கத்தைக் கூறு போடுவேன் என அச்சுறுத்தாமல் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

இருப்பினும், இப்போதும் பௌத்த தேரர்கள் ஏறுமாறான போக்கையே தொடருகிறார்கள். கடந்த காலத்தில் பெரும்பான்மை பௌத்த தலைவர்கள் பேசவேண்டியிருந்த போதும் உறுதியாகப் பேசாமல் வாய்மூடி இருந்துவிட்டார்கள். மவுண்ட்லவேனியாவில் றோகிங்யா முஸ்லிம் ஏதிலிகள் பௌத்த தேரர்கள் தலைமை தாங்கிய ஒரு கும்பலால் தாக்கப்பட்ட போது எந்தவொரு



தன்மானமுள்ள மதத் தலைவரும் அதனைக் கண்டித்திருக்க வேண்டும். பெரும்பான்மை பௌத்த மதத் தலைவர்கள் மனிதர்களுக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச மனிதாபிமானத்தையேனும் வெளிக்காட்டவில்லை. அதுமட்டும் அல்லாது கடந்த காலத்தில் முஸ்லிம்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பல தாக்குதல்கல் களுக்கு எதிராகப்பேசவும் இல்லை.

**வாய் திறக்காத மகா நாயக்கர்கள்**

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு மக்களோடு எந்தவித கலந்தாலோசனையும் செய்யாது அரசமைப்புக்கு 18 ஆவது சட்டத்திருத்தத்தை அறிமுகப்படுத்தியபோது சமூக அக்கறை கொண்ட ஒரு சில தேரர்களே அதற்கு எதிராகப் பேசினார்கள். மகாநாயக்க தேரர்கள் பேசவே இல்லை.

கடந்த வாரம் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களைச் சார்ந்த காரக்க மகா சங்க சபை புதிய அரசமைப்புக்கு அல்லது இப்போது இருக்கும் அரசமைப்புக்கு ஏதாவது திருத்தம் செய்வதற்குத் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்கள். அரசமைப்பை வரையும் நடைமுறையை நிறுத்துமாறு வற்புறுத்தியுள்ளார்கள்.

மிக அண்மைக் காலம் வரை வெள்ளை வான்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தன. வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்த சிறைக் கைதிகள் விசாரணை நடவடிக்கைகள் ஏதுமின்றிச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். ஊடகங்கள் தாக்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் பட்டப்பகலில் கொல்லப்பட்டார்கள். அப்போதெல்லாம் கருணையைத் தாமே மனதார விரும்பி ஏற்றுக்கொண்ட மகா நாயக்க தேரர்கள் சிறியளவிலாவது தங்கள் உண்மையான உணர்வை வெளிப்படுத்தவில்லை.

எனவே, அவர்கள் சடுதியாகப் பொங்கி எழுந்து அரசமைப்புத் தொடர்பாக அக்கறை காட்டுகின்றமை வேறு எதையோ சுட்டிக்காட்டுகிறது. ஓர் ஆடம்பரமான பொம்மலாட்டம் நடைபெறுகிறது போலத் தெரிகிறது. அதனைப் புகழ்வாய்ந்த



பொம்மலாட்டக்காரரான மஹிந்த ராஜபக்ஷ திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு (கயிற்றை) ஆட்டுகிறார். பெரிய பௌத்த கோயில்களில் அண்மைக் காலமாக நடைபெறும் பெருங்கூச்சல்களை இப்படித்தான் நோக்க வேண்டும்; இப்படித்தான் பார்க்க வேண்டும்.

**திடீர் எதிர்ப்பு**

கடந்த வாரம் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகா சங்க சபை புதிய அரசமைப்புக்கு அல்லது இப்போது இருக்கும் அரசமைப்புக்கு ஏதாவது திருத்தம் செய்வதற் குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள். அரசமைப்பை வரையும் நடைமுறையை நிறுத்துமாறு வற்புறுத்தியுள்ளார்கள்.

பின்னர் இந்த வார முடிவில் கோட்டை கல்யாணி காரக்க சபை, கல்யாணி சமகிரி தர்ம மகா சங்க சபை முன்மொழியப்படும் புதிய அரசமைப்பைத் திரும்பப்பெறுமாறு வேண்டு கோள் விடுத்துள்ளன.

ஜனநாயகம் மதகுருமார்களால் மேற்கொள்ளப்படுவதில்லை. நாங்கள் புரோகிதர்களின் ஆட்சியில் வாழவில்லை. எங்கே மதகுருமார் ஆளுகிறார்களோ அங்கே மத்தியகால நரகத்தை 21 ஆவது நூற்றாண்டில் திறம்பட மறு உருவாக்கம் செய்துள்ளார்கள். வேறு எங்கேயும் போக வேண்டாம் ஈரான் மற்றும் சவுதி அரேபியா இரண்டையும் பாருங்கள். நவீனகாலத்தைப் புரிந்துகொண்ட மதகுருமார்கள் நவீனகாலத்துச் சமூகங்களில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றிப்பிடித்துள்ளார்கள். ஆனகாரணத்தால் அதற்கான பரி காரங்களை செய்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக சில ஆண்டுகளுக்கு முன்னர் கன்ரபெரியின் முன்னாள் பேராயர் வண. றோவன் வில்லியம்ஸ் "பிரித்தானியா இப்போது கிறிஸ்தவ சமூகத்துக்கு பிந்திய காலத்தில் இருக்கிறது" எனக் கூறியிருக்கிறார்.

இதில் சுவையான அம்சம் என்னவென்றால், அவர் (றோவன் வில்லியம்ஸ்) பிரித்தானியா "ஒரு கிறித்தவ நாடு என்ற தகைமை பற்றி நாங்கள் அதிக தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டும்" மற்றும் "இன்னும் அதிகமான தீவிர சீர்திருத்த நம்பிக்கையோடு" (more evangelical) இருக்க வேண்டும் என்று இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரோன் கூறியமையை மறுப்பதாக உள்ளது.

**மனிதாபிமானமற்ற செயல்**

மவுண்ட்லவேனியாவில் றோகிங்யா முஸ்லிம் ஏதிலிகள் மீது பௌத்த தேரர்கள் தலைமை தாங்கிய ஒரு கும்பலால் தாக்கப்பட்ட போது எந்தவொரு தன்மானமுள்ள மதத் தலைவரும் அதனைக் கண்டித்திருக்க வேண்டும். பெரும்பான்மை பௌத்த மதத் தலைவர்கள் மனிதர்களுக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச மனிதாபிமானத்தையேனும் வெளிக்காட்டவில்லை. அதுமட்டும் அல்லாது, கடந்த காலத்தில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பல தாக்குதல்கல்களுக்கு எதிராகப் பேசவும் இல்லை.

ஓர் அரசின் அங்கீகாரத்துக்கு மதத்தை ஓர் அரசியல் மூலோபாயமா



## பௌத்த மதத்தின் கீர்த்திக்கு ஊறு விளைவிக்கும் செயல் இது

கப் பயன்படுத்துகின்றமை என்பது ஒன்றும் புதியதல்ல. இந்தப் போக்கு நாடுகள் ஜனநாயகத்தைக் குறைக்கவும் சமயம் மற்றும் இன அடிப்படையில் (மக்களை) விலக்கிவைக்கவும் வழி வகுக்கும். விருப்பு வெறுப்பின்றிச் சொல்வதானால், இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்துக்குப் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் பௌத்த தேரர்கள் முட்டுக்கட்டையாக இருந்து வந்திருக்கிறார்கள்.

அவர்களது தீய செல்வாக்கை முதுகெலும்பில்லாத அரசியல்வாதிகள் (எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா "செவல பண்டா" என்று பொருத்தமாக அழைக்கப்பட்டார்) மேலும் மோசமாக்கியிருக்கிறார்கள். சமாதானம், வழமை இரண்டையும் அடைய அரசியல்வாதிகள் தவறி விட்டார்கள்.

1956 ஆம் ஆண்டு தொடக்கம் வலதுசாரி பௌத்தம் நாட்டின் சிறுபான்மை மக்களது சிக்கல்களைக் களைய எடுத்த ஒவ்வொரு முயற்சியையும் வலதுசாரி பௌத்தம் தடையாக இருந்துள்ளது. மீண்டும் மீண்டும் சிங்கள உயர் குழாத்தால் அவமதிப்புக்கு உள்ளாக்கப் பட்டதன் விளைவாக (தமிழ் மக்கள் மத்தியில்) வன்முறை உருவெடுத்தது. அதன் உச்சக்கட்டம் மூன்று சகாப்த மாக நடந்த பயங்கரவாதப் போரில் முடிந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




## கட்டலோன் சர்வஜன வாக்கெடுப்பும், முதலாளித்துவ நெருக்கடியும்

ஸ்பெயினில் தொழிலாள வர்க்கம் மீதான தாக்குதல்களுக்கு பின்னால், உண்மையில், ஐரோப்பிய முதலாளித்துவ நெருக்கடியும் உலகளாவிய முதலாளித்துவ நெருக்கடியுமே காரணமாக அமைந்துள்ளன. 1991 இல் ஸ்ராலினிச அதிகாரத்துவத்தால் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதற்குப் பின்னர் ஒரு கால் நூற்றாண்டாக மத்திய கிழக்கு எங்கிலும் நடந்த தீவிர ஏகாதிபத்தியப் போர்கள் மற்றும் சமூக வெட்டுக்களுக்குப் பின்னர், ஐரோப்பிய முதலாளித்துவம் பொறிவின் முன்னேறிய நிலையில் உள்ளது. குறிப்பாக 2008 வோல் ஸ்ட்ரீட் பொறிவு மற்றும் உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள ஆளும் உயரடுக்குகள் அனைத்தும் இராணுவ மற்றும் பொலிஸ் முகமைகளைப் பலப்படுத்த முனைந்தமையுடன், அதேவேளையில் தொழிலாளர்கள் மீது பேரழிவுகரமான சிக்கனக் கொள்கைகளைத் திணித்து வந்துள்ளன.

இது, கிரீஸ், போர்த்துக்கல், இத்தாலி மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் பெரும் பகுதிகளைப் போலவே, ஸ்பெயினையும் சீரழித்துள்ளது. ஸ்பானிய முதலாளித்துவம் பொருளாதார ரீதியில் மரணப்படுக்கையில் உள்ளது. ஸ்பெயினின் வேலைவாய்ப்பின்மை விகிதம் பெரியளவில் 17.8 சதவீதமாகவும், 25 வயதிற்கு குறைந்தவர்களிடேயே 38.6 சதவீதமாகவும் உள்ளது. வேலைவாய்ப்பற்ற நால்வரில் ஒருவர் குறைந்தபட்சம் நான்காண்டுகளாக வேலையின்றி இருந்திருப்பார். 2.5 மில்லியன் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பற்றோர் பதிவேட்டில் இல்லாமற் போனதற்கான காரணம் ஸ்பெயினில் வேலைகிடைக்காது அவர்கள் வேலையைத் தேடி வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்ததனாலாகும்.

இதன் விளைவாக, சமூக சமத்துவமின்மை அதிகரித்துள்ளது. மொத்த குடும்பங்களில் பாதி, இப்போது, உத்தியோகபூர்வ வறுமை மட்டத்துக்குக் கீழே வருவாய் ஈட்டுகின்றன அல்லது வறுமைக்குட்படும் அபாயத்தில் உள்ளன (வறுமை மட்டம் என்பது, ஒரேயொருவர் சம்பாதிக்கும் குடும்பங்கள் என்றால் 8,010 யூரோ, இரண்டு பெரியவர்கள் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் இருப்பவர்களுக்கு 16,823 யூரோ). இதற்கு எதிர்முரணாக, நாட்டின் செல்வந்தர்களது சொத்துக்கள் -அதாவது குறைந்தபட்சம் 7 லட்சம் யூரோ சொத்துக்கள் வைத்திருப்பவர்கள்- 44 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது; மக்கள் தொகையில் சுமார் 0.4 சதவீதத்தினர் இப்போது ஸ்பெயினின் செல்வவளத்தில் பாதியை உடைமையாகக் கொண்டுள்ளனர்.




இதில் ஸ்பெயினில் உள்ள 100 மிகப் பெரிய பில்லியனர்களில் மாட்ரிட்டில் உள்ள 25 பேருடன் ஒப்பிடுகையில், கட்டா லோனைச் சேர்ந்த அல்லது கட்டலோனியாவில் தங்களின் செல்வங்களை வைத்திருக்கும் 28 பேரும் உள்ளடங்குவர்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்கா எங்கிலும், சமூக சமத்துவமின்மை ஜனநாயக ஆட்சி வடிவங்களுக்குப் பொருந்தாத மட்டங்களை எட்டி வருகின்றன. பெரும் அதிருப்தியை முகங்கொடுத்து, ஆளும் உயரடுக்கு போர் மற்றும் பொலிஸ் - அரசு ஆட்சி வடிவங்களுக்குத் திரும்பி வருகின்றன. வடகொரியாவுக்கு எதிராக ட்ரம்ப், ''முழுமையாக அழிக்கும்'' இனப்படுகொலை போர் அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்ற நிலையில், அவர்களது நிர்வாகமோ வேர்ஜினியாவின் சார்லட்வில்லில் ஓர் இடதுசாரி போராட்டக்காரரின் படுகொலைக்குப் பொறுப்பான ஹீதர் ஹெயர் என்ற நவ - நாஜியைப் பாராட்டி, பாசிசவாத உணர்வைத் தூண்டிவிட்டு ஆதரவளிக்கின்றது.

மாட்ரிட்டின் சர்வாதிகாரக் கொள்கைகள் எதை நோக்கிச் செல்கின்றன என்பதைக் காண ஒருவர் அண்மையில் உள்ள பிரான்ஸைப் பார்த்தாலே போதுமானது. அவசரகால நிலையின் கீழ் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் காலவரையின்றி இடைநிறுத்தம் செய்திருக்கின்றமை, தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகள் மற்றும் பாதுகாப்புகளை இல்லாதொழித்துத் தொழிற்றுறை ''சீர்திருத்தங்களை'' திணிக்கவும் மற்றும் பெருந்திரளான மக்களின் எதிர்ப்புக்கு இடையிலும் மருத்துவம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பின்மை சலுகைகளில் வெட்டுக்களைத் திணிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஸ்பெயினின் சமூக நெருக்கடி, 1978 இல் பிராங்கோ மரணத்துக்குப் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் ஒழுங்கமைப்பை உடைத்தழிக்கின்றது. PSOE கட்சியும் ஸ்பானிய கம்யூனிஸ்ட் கட்சியும் (PCE) இந்த ''இடைமருவு காலத்தை'' (Transition) அமைதியாக நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குத் திரும்புவதற்கான திருப்பமாகப் புகழ்ந்தன. மறப்பதற்கான உடன்படிக்கை'' மற்றும் பாசிச குற்றங்கள் மீதான 1977 பொதுமன்னிப்புச் சட்டம் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டமை, PSOE மற்றும் PCE ஐ ஆளும் ஸ்தாபகத்துக்குள் உள்ளிணைத்துக் கொண்ட தன் மூலமாக அதன் குற்றங்கள் மீதான எந்தவொரு கணக்கெடுப்பையும் தவிர்க்க பிராங்கோ ஆட்சியை அனுமதித்தது.



அந்த இடைமருவு காலத்தின் போது, பழைய பிராங்கோ ஆட்சி, அந்தப் பிராந்திய முதலாளித்துவ வர்க்கம் அரசு இயந்திரத்துக்குக் காட்டிய அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தி வைக்க, அவர்களுக்கு கணிசமான விட்டுக்கொடுப்புகளை வழங்கியது. கட்டலோன் மொழி பரவலாகவும் பொதுமக்களிடையேயும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் இருந்து, அது ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒன்பதாவது மிகப் பரவலாக பேசும் மொழியாக மாறியுள்ளது. 80 இற்கும் அதிகமான தொலைக்காட்சி சனல்களும் 100 வானொலி நிலையங்களும் கட்டலோனில் இருந்து தினமும் ஒளி - ஒலிபரப்பாகின்றன. உலகில் 150 இற்கும் அதிகமான பல்கலைக்கழகங்கள் கட்டலான் மொழியைக் கற்பிக்கின்றன. 400 இற்கும் அதிகமான இதழ்கள் அந்த மொழியில் பிரசுரமாகின்றன.

பார்சிலோனாவில் உள்ள கட்டலோன் முதலாளித்துவ வர்க்கம் பிராங்கோவுக்கு பிந்தைய சகாப்தத்தில் சுயாட்சி மற்றும் பிரிவினைவாதக் கோரிக்கைகளுடன் ஊடல் கொண்டு இருந்த போதிலும், கட்டலோன் முதலாளித்துவ வர்க்கம் பிரிவினை கோராது என்றும் இதற்குப் பிரதியீடாக மாட்ரிட் கட்டலான் தேசியவாத உணர்வுகளை ஆக்ரோஷமாகத் தாக்காது என்பதிலும் அது மறைமுகமாக உடன்பட்டிருந்தது.

இந்த இடைமருவு காலத்துக்குப் பிந்தைய ஆட்சி இப்போது உடைய ஆரம்பித்து உள்ளது. ஸ்பானிய ஆளும் வர்க்கத்துக்குள் ஒரு கடுமையான மற்றும் வன்முறையான கன்னை மோதல் கட்டவிழ்ந்து வருகிறது. வெறும் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பிராங்கோ ஆட்சியை இப்போதும் பல தொழிலாளர்களால் நினைவுகூர முடியும் என்ற ஒரு நாட்டில், மாட்ரிட்டின் மூர்க்கமான ஒடுக்குமுறை ஒரு கூர்மையான எச்சரிக்கையாக உள்ளது. 1930 களுக்குப் பிந்தைய மிக ஆழ்ந்த முதலாளித்துவ நெருக்கடிக்கு இடையே, இடைமருவு காலத்துக்குப் பிந்தைய ஆட்சி அது எதிரிருந்து மேலெழுந்ததோ, அதே பிராங்கோயிஸ ஆட்சியின் சர்வாதிகார கொள்கைகளை நோக்கி அதிகரித்தளவில் மீண்டும் பின்நோக்கி திரும்பி வருகிறது.

கட்டலோனியா மீதான மாட்ரிட்டின் ஒடுக்குமுறையை எதிர்க்கும் தொழிலாளர்களும் மக்கள் கட்சியின் ஏதோ வோர் ஒடுக்குமுறை நடவடிக்கையை மேலோட்டமாக எதிர்க்கும் வகையில் தங்களை மட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது. அவர்கள் முகங்கொடுப்பது என்னவென்றால், ஸ்பெயினின் சிறுபான்மை அரசின் தோல்வியை அல்ல. மாறாக முதலாளித்துவத்தின் தோல்வியே ஆகும். அவர்கள் ஸ்பெயினிலும் ஐரோப்பா எங்கிலும் தொழிலாள வர்க்கத்தை புரட்சிகரமாக அணிதிரட்டுவதன் மூலமாக இந்த அரசைத் தூக்கியெறிய முனைய வேண்டும்.




(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



139





## அத்தியாயம் - VIII

## எனது பார்வையில் பிரபாகரன்

''நீங்கள் பிரபாகரனிடம் கண்டு வியந்த குணாம்சங்களில் முக்கியமானது எது?'' என்று நான் பாலாவிடம் கேட்டேன். ''இன்னல்களும் இடர்களும் எழுந்த நெருக்கடியான காலகட்டங்களில் தளராத தன்னம்பிக்கையுடன் செயலாற்றுகின்றமை தான் பிரபாகரனின் ஆளுமையில் நான் கண்டு வியந்த அபூர்வமான குணாம்சம்.'' என்று பாலா சொன்னார். தனது விடுதலை இலட்சியத்துக்காக அவர் செயற்படும் போது அவரிடம் காணப்படும் உறுதியான, தீர்க்கமான, தளராத தன்நம்பிக்கையைப் பல தடவைகள் பாலா அவதானித்திருக்கிறார். தர்மத்தில் நம்பிக்கை கொண்டவர் பிரபாகரன். தனது மக்களின் போராட்ட இலட்சியம் சரியானது, நீதியானது, நியாயமானது. எனவே, போராட்டத்தின் இறுதி வெற்றி நிச்சயம் என்பது பிரபாகரனின் அடிமனதில் ஆழ வேரூன்றிய நம்பிக்கை என்பது பாலா தரும் விளக்கம். ஓர் அரசியல் தலைவனாகவும், எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகிவரும் பிரபாகரன், ஒரு தலைசிறந்த குடும்பத் தலைவருமாவார். தனது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் இருபத்துநான்கு மணிநேரமும் கடமையில் ஈடுபட்டிருந்த போதும், போராட்டத்தின் பெரும் பொறுப்புக்களுக்கும், கணவன், தந்தை என்ற நிலையில் தனது குடும்பக் கடப்பாடுகளுக்கும் மத்தியில் ஓர் ஒத்திசைவான சமநிலையைப் பேணி அவர் செயற்பட்டு வருகின்றார். இந்த அபூர்வமான உறவில், பிரபாகரனின் மனைவியான மதிவதனி அதி உயர்ந்த தியாகத்தைச் செய்திருக்கின்றார் என்று தான் சொல்ல வேண்டும். தாம்பத்திய வாழ்வில் கணவருடன் எந்த அளவுக்கு ஒன்றித்து வாழ அவர் விரும்பினாரோ, அந்த அளவுக்கு வாழ்க்கையை நடத்த நேரமும் வாய்ப்புகளும் அவருக்குக் கிட்டுவதில்லை. பிள்ளைகளைப் பேணிப் பராமரிக்கும் பொறுப்பில் அவர் எப்பொழுதுமே கண்ணும் கருத்துமாக இருக்கின்றமையால், அவரது செல்வாக்குத்தான் பிள்ளைகள் மீது படிமானமாக இருக்கிறது. பிரபாகரனது குடும்பத்தின் வாழ்க்கையை சாதாரண வாழ்க்கையாகக் கருதிவிட முடியாது. பிரபாகரனது மனைவி, பிள்ளைகள் என்பதால் அவர்களுக்கு தனித்துவமான சமூக அந்தஸ்து இருக்கிறது. இந்த சமூக தகைமையிலிருந்துதான் அவர்களது வாழ்க்கை முறையையும் உறவு முறையையும் ஆய்வுசெய்ய வேண்டும். பெற்றோர் என்ற முறையில் பிள்ளைகளின் பாதுகாப்பு, அவர்களது எதிர்கால வாழ்க்கை பற்றிய கவலை பிரபாகரனுக்கும், அவரது துணைவியாருக்கும் இருக்கத்தான் செய்கிறது. யாழ்ப்பாண பெற்றோரின் அபிலாஷைகளுக்கு ஏதுவான முறையில், பிரபாகரனும் மதியும் தமது பிள்ளைகளைக் கல்வி கற்கையில் ஊக்கப்படுத்தி வருகின்றனர். கல்வியறிவைப் பிள்ளைகளிடம் விருத்தி செய்யவேண்டும் என்பதில் மதிக்கு ஆழமான அவா இருக்கின்றமையால், தனது பிள்ளைகளுக்கு, வீட்டில், தனியாகப் பலமணி நேரமாக அவர் பாடம் சொல்லிக் கொடுப்பார்.









> ''நீங்கள் பிரபாகரனிடம் கண்டுவியந்த குணாதிசயங்களில் முக்கியமானது எது? என நான் கேட்டபோது இன்னல்களும் இடர்களும் எழுந்த நெருக்கடியான காலகட்டங்களில் தளராத தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவது தான் பிரபாகரனின் ஆளுமையில் நான் கண்டு வியந்த அபூர்வமான குணாம்சம் என்று பாலா கூறினார்.''

பிரபாகரன் குடும்பப் பற்றுள்ளவர். அற வாழ்வும், அவரது வாழ்க்கையின் அடிநாதமாக இருக்கிறது. பிரபாகரனுக்கு 'கடமை ஓய்வு' கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தனது துணைவியாரையும் மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டுக்கு வருவார். 1985 ஆம் ஆண்டு பிறந்த அவரது மூத்த மகனின் பெயர் சாள்ஸ். சாள்ஸைவிட ஒரு வயது இளமையான மகள் துவாரகா. 1996 ஆம் ஆண்டு எதிர்பாராத அதிசயமாக குடும்பத்துக்கு வந்து சேர்ந்த குழந்தை பாலச்சந்திரன். முதற் குழந்தையின் பிரசவத்தில் மதிக்கு நான் உதவி செய்தேன். அப்போது, உரிச்சுப் படைச்சு தோற்றத்தில் மட்டுமன்றி குணாம்சத்திலும் தகப்பனைப் போலவே குழந்தை வளர்ந்து வருமென நான் நினைக்கவில்லை. ஒரே பெண் குழந்தையான துவாரகா படிப்பில் ஆழமான அக்கறையும் பொறுப்புணர்வும் உடையவர். பிரபாகரனின் கடைக்குட்டி பாலச்சந்திரன் குடும்பத்தில் எல்லோருக்கும் செல்லக் குட்டி. அச்சு வார்த்ததுபோல பிரபாகரனின் மறுதோற்றம். நான் வன்னியை விட்டுப் புறப்பட்ட வேளையில் குழந்தை பாலச்சந்திரன் குறிப்பிட்ட வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. அதனால் அவரது ஆளுமைபற்றி அதிகம் என்னால் சொல்லமுடியாது.

(தொடரும்...)

தொடர்ந்தும் போராடுவது

# தமிழர்களான எமது கடமை



தமிழர்களின் இனப்பிரச்சினை விடயத்தில் சர்வதேச சமூகம் யதார்த்தத்துக்கு அண்மித்ததாக வந்திருப்பதையே ஐ.நா. அறிக்கையாளர் பப்லோ டி கிரீப்பின் மதிப்பீட்டின் அடிப்படையிலான பரிந்துரைகள் உணர்த்தியுள்ளன. அத்துடன் நின்றுவிடாது இதேநிலையில் மேலும் வலுப்பெற்றுத் தமிழர்களுக்கு உரிய நீதி கிடைக்க சர்வதேச சமூகம் துணை நிற்க வேண்டும் என வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இரண்டு வாரகாலம் இலங்கையில் தங்கியிருந்து நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ள உண்மை, நீதி, நட்டஈடு மற்றும் மீள்நிகழாமை தொர்பாக ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பப்லோ டி கிரீப், தனது விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் வெளியிட்ட கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும் போது இதுவரை காலமும் தமிழர் தரப்பில் அழுத்தமாக வலியுறுத்திக் கூறப்பட்டு வந்த நிலைக்கு அண்மித்ததாக சர்வதேசத்தின் நிலைப்பாடு வந்திருப்பதாக உணரமுடிகின்றது.

இலங்கைக்குள் நம்பகரமான மற்றும் சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுத்து நீதியை நிலைநாட்டாவிடில் சர்வதேச மட்டத்தில் நீதியைத் தேடுவதற்கான முயற்சிகள் மிகவும் வலுவான முறையில் இடம் பெறும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா. அறிக்கையாளர், யுத்த வெற்றி வீரர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரமாட்டோம் என யாரும் கூற முடியாது என்று கூறியிருப்பதன் மூலம் தமிழினப்படுகொலை நிகழ்த்திய சிங்கள இராணுவத்தினரைப் பாதுகாக்க முயலும் அரசின் முயற்சியை மறைமுகமாக கண்டிப்பதாகவே அமைந்துள்ளது.

கால அட்டவணையுடன் கூடிய பரந்துபட்ட மற்றும் சுயாதீனமான நிலைமாறு கால நீதிப்பொறிமுறை ஒன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நீக்குவதுடன் அதற்குப் பதிலாக கொண்டுவரப்படும் சட்டம் சர்வதேச தரங்களைப் பின்பற்றுவதாக அமைய வேண்டும்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்ற இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும். காணி விடுவிப்பு தொடர்பான நேர அட்டவணை அவசியம். மனித உரிமை காப்பாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் முக்கியமாக பெண்கள் ஆகிய தரப்பினர் மீதான பாதுகாப்பு தரப்பின் கண்காணிப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். சுயாதீனத்தன்மை, வெளிப்படைத் தன்மை என்பவற்றின் அடிப்படையில் காணாமல்போனோர் குறித்த அலுவலகத்துக்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

தடயவியல் விசாரணைகளுக்காக உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச உதவிகளைப் பெறலாம். பாதிக்கப்பட்ட மக்கள் தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பன போன்ற பரிந்துரைகளை பப்லோ டி கிரீப் முன்வைத்துள்ளார்.

இருந்தும் இவை, தமிழர்களுக்கு எதிராக நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கும் உரிமை மீறல்களுக்கும் உயிர்ப் பறிப்புகளுக்கும் நேரடிக்காரணமானவர்களாக விளங்கி வருபவர்களையும் அவர்களைக் காப்பாற்றுவதிலேயே முழுக்கவனம் செலுத்தி வருபவர்களையும் எவ்வாறு கட்டுப்படுத்தப் போகின்றது? வழக்கம் போன்று எதனையுமே ஏற்க மறுக்கும் அரசு இவரது பரிந்துரைகளையும் ஏற்க மாட்டோம் என்றும் அது எவ்வகையிலும் தம்மைக் கட்டுப்படுத்தாது என்றும் கூறியுள்ளமை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு–

எனக்கு கிடைத்த ஆதாரங்களின்படி நான் அவதானிப்புக்களைச் செய்கிறேன். அரசியல் எதிர்பார்ப்பு மிக அவசியமாகின்றது. ஆனால், ஐக்கிய நாடுகளின் நிபுணர் என்ற அடிப்படையில் எனது பரிந்துரைகள் சட்டரீதியான பின்னிணைப்பைக் கொண்டவையல்ல என்று பதிலளித்துள்ளதன் மூலம் மேற்குறித்த வினா தமிழ் மக்களின் மனங்களில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

> யதார்த்தத்திற்கு அண்மித்ததாக வந்திருக்கும் சர்வதேசத்தின் நிலைப்பாடு மேலும் வலுப்பெற வேண்டும்.- அனந்தி சசிதரன்!

ஐ.நா. அறிக்கையாளர் கண்டுணர்ந்துள்ள இந்த விடயங்களைத்தான் தமிழர் தரப்பில் இருந்து இத்தனை ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன. அவற்றையும் மீறியே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு ஆண்டுகால அவகாசம் வழங்கப்பட்டதுடன் குற்றவாளிகள் தம்மைத் தாமே விசாரிக்கும் விதத்தில் அதுவும் வலுவிழந்த உள்நாட்டு பொறிமுறைக்குள் விசாரணைகளை நடத்தவும் அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போதைய பரிந்துரைகள் இலங்கை அரசின் மீதான நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக் குவதாகவே அமைந்துள்ளது.

19 ஆவது திருத்தச்சட்டம், நல்லிணக்க பொறிமுறைக்கான ஆலோசனைகளை முன்னெடுப்பதற்கான செயலணி உருவாக்கம் மற்றும் அந்த செயலணியால் முன்வைக்கப்பட்ட அறிக்கை, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டதுடன் இந்த ஆணைக்குழுவிற்கு ஆணையாளர் நியமிக்கப்பட்டமை போன்றவற்றை, கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றங்களாக ஐ.நா. விசேட அறிக்கையாளர் சுட்டிக்காட்டியுள்ளமை வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக அமைந்துள்ளது.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரே நோக்கில் இலங்கை அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான கண்துடைப்பு நடவடிக்கைகளை சிறந்த முன்னேற்றமாக சர்வதேச சமூகம் கடந்த காலங்களில் ஏற்று அங்கீகரித்திருந்தமையே பொறுப்புக் கூறலில் இருந்து ஒவ்வொரு முறையும் இலங்கை அரசாங்கம் தப்பித்து வருவதற்கும் உரிய நீதியைத் தமிழர்களுக்கு வழங்காது விடுவதற்கும் ஊக்குவிப்பாக அமைந்திருந்தது.

தற்போதும் இவ்வாறான அரைகுறையான விடயங்களை முன்னேற்றமாக எடுத்துக் கொண்டிருப்பதானது இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்புக் கூறவைப்பதற்குப் பதிலாக தந்திரத்தனமான செயற்பாடுகளின் மூலம் காலத்தை இழுத்தடித்து அனைவரையும் ஏமாற்றுவதற்கே வழிகோலும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

இத்தனை ஆண்டுகளாக தமிழர்களாகிய நாம் கூறிவந்த விடயங்களை ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் கூறியுள்ளதன் மூலம் எமது நிலைப்பாட்டிற்கு அண்மித்ததாக சர்வதேசம் வந்திருப்பதையே காட்டுகின்றது. இது, நீதிக்காக ஓயாது போராடிக் கொண்டிருக்கும் தமிழர்கள் அடைந்திருக்கும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

இதே நிலையில் மேலும் வலுப்பெற்று தமிழர்களுக்கு உரிய நீதி கிடைத்திட சர்வதேசம் உறுதுணையாகச் செயலாற்ற வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழர்களின் எதிர்பார்ப்பாகும். அத்துடன் நீதிக்கான எமது போராட்டங்களைத் தொடர்வதன் மூலமே அந்த நிலைநோக்கியதாக சர்வதேசத்தை உந்தித்தள்ள முடியும் என்பதால் எமக்கான நீதி கிடைக்கும் வரை உறுதியுடன் தொடர்ந்து போராடுவது தமிழர்களாகிய எமது கடமையாகும். – என்றுள்ளது. (இ)

# புதிய அரசமைப்புக்கு எதிராக...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்ந்து (தமிழ்மக்களது) குறைகள் அலட்சியப்படுத்தப்பட்டால்வரலாறுமீளாது என்று நம்புவது அப்பாவித்தன மாகும். அதற்குக் காலம் எடுக்கலாம். ஆனால், பிரபாகரனின் பேரிடர்ப்பாடு காரணமாக ஏற்பட்ட பெரிய இழப்பைத் தமிழ்மக்கள் மறந்து போகும் போது இன்னொரு பிரபாகரன் (தோன்றி) அதனை முயற்சி செய்து பார்க்கக் கூடும்.

பௌத்த தேரர்களின் வரலாற்று முட்டுக்கட்டைகள் காரணமாக சிறிலங்காவில் வாழும் எல்லா இனத்தவர்களும் துன்பப்பட்டார்கள். நாங்கள் உயிரிழப்பையும் நிறைவேறாத கனவுகளையும் விலையாகக் கொடுத்தோம்.

**துணிச்சல் மிக்க தலைவர் எவரும் இல்லை**

துரதிஷ்டவசமாக, எல்லோருக்கும் தெரிந்த உண்மையைச் சொல்ல சிறிலங்காவில் முதுகெலும்புள்ள தலைவன் கிடையாது. அதுமட்டுமல்ல அரசின் அலுவல்களில் பௌத்த தேரர்களுக்குரிய பாத்திரத்தை வரையறை செய்ய வேண்டும்.

எல்லா மதங்களும் ஊடுருவும் தன்மை வாய்ந்தவை. அவை பழைய காலத்தில் வாழ்ந்த பெருவாரியான மக்களைக் கொண்ட சமுதாயங்களை ஊடுருவுகின்றன. இதன் காரணமாகவே பொதுவுடைமைவாதிகள் தேவாலயங்களையும் கோயில்களையும் மூடினார்கள். இன்றைய துருக்கியின் நிறுவநரும் மதசார்பற்ற தலைவர்களில் ஒருவருமான Kemal Ataturk அரசையும் மதத்தையும் கண்டிப்போடு பிரித்து வைத்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருவரும் மகா நாயக்க தேரர்கள் போடும் முட்டுக்கட்டையை எதிர்த்துக் கூறுவதற்கு வேண்டிய அரசியல் துணிவு அற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். மாறாக, பிரதமர் விக்கிரமசிங்க, மல்வத்தை மகா நாயக்க தேரர் நாட்டிலேயே இல்லாத போது ஊடகங்கள் இருப்பதாகச் சொல்லி மக்களைத் தவறாக வழிநடத்தின என ஊடகங்கள் மீது பழிசுமத்தினார்.

பிரதமர் விக்கிரமசிங்க, மல்வத்தை மகா நாயக்கர் சார்பாக அல்ல அரசின் சார்பாகப் பேசவேண்டும். ஆனால், அதற்கான அரசியல் துணிவு அவருக்கு இல்லாமல் இருக்கிறது. சிறிலங்காவுக்கு இன்று தேவைப்படுவது சேர் ஜோன் கொத்தலவல போன்ற அரசியல் தடுமாற்றம் இல்லாத தலைவர்களே. அவர் உள்ளதை உள்ளவாறு (call a spade a spade) சொன்னார். அல்லது ரஞ்சன் விஜயரத்தன போன்று தவிர்க்க முடியாத பாதுகாப்புக் காரணமாக அரசியல் சில்லறை நுட்ப வேறுபாடுகளைத் தூர எறிந்துவிட்டு நாட்டை அடக்குமுறையில் இருந்து காப்பாற்றினார்.

அரசியல் திண்மை இல்லாத காரணத்தால் இந்த அரசு கொள்கை தொடர்பாக எடுக்க வேண்டிய ஒவ்வோர் அரசியல் முடிவுகள் பற்றியும் ஏன் ஊசலாடுகிறது என்பது விளங்கவில்லை. ஓர் அரசின் தலையாய பணி நாட்டை ஆட்சி செய்வது, அதன் நிமித்தம் அதன் கையில் உள்ள சட்டம், நிர்வாகம் மற்றும் இறுக்கமான அதிகாரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். சிறிலங்கா ஒரு முழுமையான ஜனநாயக நாடாக வரும் முன்னர் அது ஒரு முழுமையான ஜனநாயக நாடு போல் நடந்து கொள்ளக் கூடாது.

அப்படி நடந்து கொண்டால் சுற்றயலான (peripheral) சக்திகள் அரசை சீர்குலைக்க வழிசெய்து விடும். ஜனநாயக நாடுகளுக்கும் அரசியல் சீர்மை (political nicety) பற்றிய எல்லைகள் உண்டு. எடுத்துக்காட்டாக கட்டலோனியாவில் ஸ்பெயின் நாட்டின் அனுபவத்தைக் குறிப்பிடலாம்.

நலன்விரும்பிக் குழுக்களை உதாசீனப்படுத்துவதாலோ அல்லது அவற்றைப் பற்றி அறியத்தரும் ஊடகத்துறை மீது பழிசுமத்துவதாலோ எந்தப் பலனும் இல்லை. அரசமைப்பு உருவாக்கம் ஓர் அரசினதும் அதன் மக்களதும் செயற்பாடு. அது மகா சங்கத்தின் தனிப்பட்ட விடயமல்ல. இதனை அரசு உரத்தும் துல்லியமாகவும் சொல்ல வேண்டும்.

பௌத்த கோயில்களுக்குக் கும்பிடப் போகின்றமையும் சில யானைகளை அன்பளிப்புச்செய்வதுதற்காலிய அமைதியைத் தரக் கூடும். இருந்தும் அரசை சில தனியாள்கள் கீழறுக்க முயன்றால் அவர்களைப் புலனாய்வுத்துறை நேர் காணல் காண வேண்டியதாக இருக்கும். இதற்காக அரசாங்கம் தனது பலம் வாய்ந்த எல்லாப் புலனாய்வுத் துறைகளையும் பொதுமக்களது அங்கீகாரத்தையும் முன்கூட்டித் திட்டமிடக்கூடிய ஆளுமை மிக்க ஒருவரின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டும்.

இதற்குத் தோதானவர் சரத் பொன்சேகா என்பது எனது எண்ணம்.

# ஆரம்ப சுகாதாரப்பணிகளை மேம்படுத்த உலக வங்கி 20 கோடி ரூபா நிதி உதவி!



கொழும்பு, ஒக். 28

இலங்கையில் ஆரம்ப சுகாதாரப் பணிகளை மேம்படுத்துவதற்காக உலக வங்கி ஒத்து ழைப்பு வழங்குவதற்கு உறுதி தெரிவித்திருப்பதாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உலகவங்கியின் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சில் சமீபத்தில் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன இது தொடர்பில் பேச்சு நடத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையின் போது ஆரம்ப சுகாதாரத் திட்டங்களை தேசிய மட்டத்தில் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக சுமார் 20 கோடி ரூபா வழங்குவதற்கு உலகவங்கி தயாராக வுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக உலக வங்கி கடந்த சில வருடங்களாக சுகாதார அமைச்சுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

இந்த நிதியுதவி மூலமான திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. இந்தத் திட்டங்கள் தொடர்பில் உலகவங்கி அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சுகாதாரசேவைகள் பணிப் பாளர் நாயகம் டொக்டர் ஜயசுந்தர உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும்?

### ஜனாதிபதி, பிரதமரிடம் நாமல் கேள்வி!



கொழும்பு, ஒக். 28

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கள் தொடர்பில் அரசு வழங்கிய வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்த கேள்வியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோரிடம் நாமல் ராஜபக்ஷ கேட்டுள்ளார். தனது டுவிட்டர் தளத்தில் அவர் இந்தக் கேள்வியை முன்வைத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் வாக்குறுதியளிக்கப்பட்ட போதும், அது தற்போதுவரை இடம்பெறவில்லை. எப்போது அது நடக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

## கிளிநொச்சியில் தொடர்ச்சியாக மீட்கப்படும் வெடிபொருள்கள்!



கிளிநொச்சி, ஒக். 28

கிளிநொச்சி வட்டக்கச்சி புழுதியாறு குளத்தில் வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வட்டக்கச்சி புழுதியாறு குளத்தில் விடுதலைப்புலிகள் யுத்த காலத்தில் அனுராதபுரம் விமான நிலையத் தாக்குதலுக்கு ஒத்திகை பார்த்த விமான ஓடுபாதைகள் உள்ள இடத்தில் இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 60 MM 10 மோட்டார் ஷெல்கள், 81 MM 01 மோட்டார் செல் என்பன நேற்றுமுன்தினம் இரவு விசேட அதிரடி படையால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இரணைமடு விமான படையினரால் இராமநாதபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு நீதி மன்ற அனுமதிபெற்று விசேட அதிரடிப்படையால் இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தவர் கைது!

கிளிநொச்சி, ஒக். 28

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் வைத்திருந்தவருக்கு நேற்றுமுன்தினம் 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் 18 ஆயிரத்து 850 மில்லி லீற்றர் மதுபானம் வைத்திருந்த நபர் ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில், இந்தச் சந்தேகநபரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா அவருக்குத் தண்டப்பணம் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

## புதிய அரசமைப்பை ஜனநாயக ரீதியில் கொண்டு வர பிரதமர் பூரண ஆதரவு!


தம்பர அமில தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

புதிய அரசமைப்பை ஜனநாயக ரீதியில் கொண்டு வருவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பூரண ஆதரவு உண்டு என சிரேஷ்ட பேராசிரியர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் பிரதமரை சந்தித்ததன் பின்னர் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ரத்து செய்யப்பட வேண்டும். நாட்டில் மதங்கள் இருக்க வேண்டுமே தவிர, மதங்களுக்குள் நாடு இருக்கக்கூடாது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

உத்தேச அரசமைப்பின் சில விடயங்களைத் திருத்தி அமைக்குமாறு கோரும் உரிமை பௌத்த மாநாயக்க தேரர்களுக்கும் பொது மக்களுக்கும் உண்டு.

இந்த விடயங்கள் பற்றிய உண்மைகளை எதிர்வரும் நாள்களில் அனைத்து மக்களினாலும் புரிந்து கொள்ள முடியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் ஊடாக சர்வாதிகாரி ஒருவர் உருவாக்கப்படுகின்றார். நவீன உலகத்திற்கு இந்த முறைமை பொருத்தமற்றது.

முன்னாள் ஜனாதிபதியின் கூட்டமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை கோருகின்றது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்று சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும்.

புதிய அரசமைப்பு உருவாக்கும் போது எந்தவொரு கட்சியின் சார்பிலும் செயற் படாது சுயாதீனமாக செயற்படப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

## இடைநடுவில் பெட்டி கழன்றது ரயில் பொட்டி; போக்குவரத்து ஸ்தம்பிதம்!



கொழும்பு, ஒக். 28

கொழும்பிலிருந்து மீரிகமை நோக்கி பயணித்த ரயிலின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பெட்டி வேறாகிச் சென்றமையினால் அப்பாதை ஊடாக செல்லும் அனைத்து ரயில்களும் தாமதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை ஹனுப்பிட்டிய ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் மாலை 4.45 மணிக்கு மீரிகமை நோக்கி பயணித்த ரயிலின் இணைப்பு வயரில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே ரயில் பெட்டிகள் வேறாகிச் சென்றுள்ளது என ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது. (க)

காலைக்கதிர்
Kalaikkathir



# வடசென்னைக்கு ஆபத்து; எச்சரிக்கிறார் கமலஹாசன்

எண்ணூர் கழிமுகத்தை உதாசீனம் செய்தால் வட சென்னைக்கு ஆபத்து வர வாய்ப்புள்ளது. தவறு நடந்த பின் அரசை விமர்சிக்காமல் வருமுன் காக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என நடிகர் கமலஹாசன் எச்சரித்துள்ளார்.



அரசியலில் களமிறங்கப்போகின்றேன் என நடிகர் கமலஹாசன் அறிவித்துள்ள நிலையில், வடசென்னைக்குஆபத்து வந்துள்ளது எனவும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும் என்றும் அவரது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள தகவலில் -

தவறு நடந்த பின் அரசை விமர்சிக்காமல் இதோ வருமுன்காக்க ஒரு வாய்ப்பு. எண்ணூர் கழிமுகத்தை உதாசீனப்படுத்தினால் வட சென்னைக்கு ஆபத்து என்று குறிப்பிட்டுள்ளார்.

கோசஸ்தலை ஆறு சென்னை அருகே இன்னும் முழுவதும் சாக்கடையாகாமல் மீனவர்களின் வாழ்வாதாரமாக உள்ளது. அது கூவம் அடையாற்றைவிட பன்மடங்கு பெரிய ஆறு. அதன் கழிமுகத்தின் 1090 ஏக்கர் நிலத்தைச் சுற்றுச்சூழல் சிந்தனையில்லா சுயநல ஆக்கிரமிப்பாளர்களால் இழந்துவிட்டோம்.

(Vallur Thermal Plant) வல்லூர்மின்நிலையமும் வடசென்னைமின்நிலையமும் தங்கள் சாம்பல் கழிவுகளை கோசஸ் தலையாற்றில் கொட்டுகின்றன. இதை எதிர்த்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பலவருடங்களாகப் போராடியும் அரசு பாராமுகமாய் உள்ளது. மீனவர்கள் அப்பகுதி மக்களுடன் சேர்ந்து குரலெழுப்ப முற்பட்டதும் செவிடர்காதில் ஊதிய சங்குதான். பற்றாக்குறைக்கு ஹிந்துஸ்தான் பெற்றோலியமும் பாரத் பெற்றோலியமும் தங்கள் எண்ணெய் முனையங்களை நட்டாற்றில் கட்டியிருக்கின்றன. காமராஜர் துறைமுகத்தை விரிவுபடுத்துகிறோம் என்ற போர்வையில் கோசஸ் தலையின் கழிமுகத்தின் 1000 ஏக்கர் நிலத்தைச் சுருட்டும் வேலையும் நடப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

நில வியாபாரிகளுக்குக் கொடுக்கும் முன்னுரிமையையும், உதவியையும் ஏழை மக்களுக்கு கொடுக்காத எந்த அரசும் நல்ஆற்றைப்புறக்கணிக்கும் உதவாக்கரைகள் தான். வழக்கமாக வரும் மழை போன வருடம் போல் பெய்தாலே வட சென்னைக்கு ஆபத்து வந்துவிடும்.

எனவே, தவறு நடந்த பின் அரசை விமர்சிக்காமல் இதோ வருமுன் காப்பதே நல்லது என்று கூறியிருக்கிறார்.

# எந்தச் சவாலையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருங்கள்

## கடற்படைக்கு நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தல்

எந்தச் சவாலையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று இந்தியக் கடற்படையை இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

டில்லியில், இந்தியக் கடற்படை உயர் அதிகாரிகள் கருத்தரங்கு கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகியது. அதில், இந்தியக் கடற்படையின் தயார்நிலை பற்றி விவாதிக்கப்பட்டது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனக் கடற்படையின் நடமாட்டம் அதிகரித்து இருப்பது பற்றியும், தெற்குச் சீனக்கடலில் அதன் இருப்புப் பற்றியும், தனது ஒட்டுமொத்த ஆதிக்கத்தை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை பற்றியும் இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டு வருகின்றது.

இந்த கருத்தரங்கில், இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். அவர் பேசியவை வருமாறு:-

நமது அண்டை நாட்டுக் கடல் பகுதியில் சமீபகாலமாக எதிர்மறை நிகழ்வுகள் நடந்து வருகின்றன. இதைக் கருத்திற்கொண்டு, நமது கடற்படை எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் வகையில், எப்போதும் தயார்நிலையிலும், விழிப்புடனும் இருக்க வேண்டும்.

கப்பல் மூலமாகக் ஹெலிகொப்டர்கள் கொண்டு செல்வதில் உள்ள குறைபாடுகள் விரைவில் களையப்படும்.

கடந்த ஓராண்டாகவே, கடற்படை மிகுந்த தயார் நிலையில் இருப்பதை நான் அறிவேன். தெற்குச் சீனக் கடலில் இருந்து பாரசீக வளைகுடா மற்றும் அத்திலாந்திப் பெருங்கடல்வரை கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றை நிறுத்தி இருக்கின்றது.

ஏடன் வளை குடா பகுதியில், கடற்கொள்ளைகளை ஒடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த ஆண்டு, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாட்டுக் கடற்படைகளுடன் 'மலபார் கூட்டுப் பயிற்சி' வெற்றிகரமாக நடந்தது. அதுபோல், அடுத்த ஆண்டு, போர்ட் பிளேரில் 'மிலன் கூட்டு பயிற்சி' என்ற ஒத்திகை நடைபெறும் என்று நிர்மலா சீதாராமன் பேசினார்.

# சசிகலாவால் நியமிக்கப்பட்டவரிடம் தங்கக் கவசத்தை வழங்க வேண்டும்



டி.டி.வி தினகரன் கடிதம்


முத்துராமலிங்கத்தேவர் குருபூஜைக்காக மதுரை மேலூர் வங்கியில் உள்ள தங்கக் கவசத்தை சசிகலாவால் நியமிக்கப்பட்ட பொறுப்பாளரிடம் ஒப்படைக்கவேண்டும் என டி.டி.வி தினகரன் கடிதம் எழுதியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் இருக்கும் அவரது சிலைக்கு அ.தி.மு.க. சார்பில் தங்கக் கவசம் அணிவிக்கப்பட்டது. குருபூஜை தவிர மற்ற நாள்களில் இந்தக் கவசம் மதுரை மேலூரில் உள்ள ஒரு வங்கியில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அடுத்த வாரம் குருபூசை நடைபெற உள்ளதால் தங்க கவசம், அ.தி.மு.கவில் இருந்து குருபூசைக்காகக் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது அந்த கட்சி இரு பிரிவாக உள்ளமையால் யாரிடம் வழங்குவது என்ற குழப்பத்தில் தங்கக் கவசத்தை வழங்க வங்கி மறுத்துவிட்டது.

இந்தநிலையில், டி.டி.வி. தினகரன் வங்கி மேலாளருக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளார். அதில், சசிகலாவால் நியமிக்கப்பட்ட பொறுப்பாளர் ரங்கசாமியிடம் தான் தங்கக் கவசத்தை வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 15 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இச்தியோசரின் முழு எச்சம் குஜராத்தில்!



புதுடில்லி, ஒக்.28

15கோடிஆண்டுகளுக்கு முன் டைனோசர் காலத்தில் வாழ்ந்த 'கடல் அரக்கன் எனப்படும் 'இச்தியோசர் முழு எச்சம் குஜராத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



டைனோசர் காலத்தில் பிரமாண்ட மிருகங்கள், மீன்கள், பறவைகள், ஊர்வனங்கள் வாழ்ந்துள்ளன. காலப்போக்கில் இவை எல்லாம் அழிந்து விட்டன. இவை 15 கோடி ஆண்டுகளுக்கு முன் நிலத்திலும், நீரிலும் வாழ்ந்துள்ளன. இப்படிப்பட்ட பிரமாண்ட மிருகங்கள் பூமியில் வாழ்ந்தன என்பதை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாக இப்போது இருப்பவை அதன் படிமங்கள்தான். பெரும்பாலும் வெளிநாடுகளில்தான் இந்தப் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது மீன் போல் காணப்பட்டாலும், 19ஆம் நூற்றாண்டில் இது ஊர்வன விலங்குகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. 'கடல் அரக்கன்', 'நீந்தும் டைனோசர்' என்றும் இவை அழைக்கப்பட்டன. இது 3 அடி முதல் 50 அடி நீளம் வரை வளர்ந்துள்ளன. டைனோசர் மிருகங்கள் அழிவதற்கு முன்பாகவே இது அழிந்து விட்டது.

இந்த நிலையில், இந்தியாவில் டைனோசர் காலத்தில் வாழ்ந்த 'இச்தியோசர்' என்ற உயிரினத்தின் முழு படிமத்தை குஜராத்தில் உள்ள கட்ச் பகுதியில் இந்திய விஞ்ஞானிகள் முதல் முறையாகக் கண்டுபிடித்துள்ளனர். 'இச்தியோசர்' என்பதற்கு கிரேக்கத்தில் 'கடல் பல்லி' என்று அர்த்தம். ஊர்வன வகையைச் சேர்ந்த இவை, கடலில் மிகவும் ஆழத்தில் வாழ்ந்துள்ளன. இது இப்போதைய 'டொல்பின்' போன்ற உருவத்தைக் கொண்டனவாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆனால், இது பல தொன் எடையுடன் பிரமாண்ட உருவம் கொண்டது எனவும், வேட்டையாடும் வகையைச் சேர்ந்த இதன் வாய் மிகவும் நீளமாக நீண்டும், பற்கள் மிகவும் கோரமாகவும் காணப்படும் எனவும் விஞ்ஞானிகள்தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில்இதுபோன்ற படிமம் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் முறை. இதற்கு முன், வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மட்டுமே இந்த உயிரினத்தின் படிமம் கிடைத்துள்ளது. இதன் மூலம், டைனோசர் கால உயிரினங்களின் பரிணாமம் இந்தியாவிலும் இருந்துள்ளது என்பது உறுதியாகி உள்ளது.

# மகள் திருமணத்திற்கு விடுப்புக் கிடைக்கும்

## முருகன் நம்பிக்கை

தொலைபேசி கைப்பற்றப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்பட்ட முருகன், தனது மகள் திருமணத்திற்கு விடுப்பு(பரோல்) கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் ஆயுள்தண்டனை பெற்ற முருகன், வேலூர் மத்திய சிறையிலும், அவருடைய மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், அறையில் இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன என அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

நீதிமன்றம் அழைத்து வரப்பட்டிருந்த முருகன், நீதிமன்ற வளாகத்தில் நீண்டநேரம் காத்திருந்தார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறியவை வருமாறு-

'எனது மகள் திருமணத்தை நான் நடத்தாமல் வேறு யார் நடத்துவார்கள். அதற்காக நளினி தற்காலிக விடுப்புக் கேட்டுள்ளார். அவருக்கு முதலில் விடுப்பு கிடைக்கட்டும். அவர் சென்று திருமண ஏற்பாடுகளைச் செய்யட்டும். அதன்பிறகு எனக்கும் விடுப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

# பட்டாசு ஆலையில் தீ! 50 பேர் கருகிச் சாவு


இந்தோனேஷியாவில் பயங்கரம்

ஜகார்த்தா,ஒக்.28

இந்தோனேஷியா நாட்டில் டாங் ஜெராங் என்ற இடத்தில் உள்ள பட்டாசு உற்பத்தித் தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் 50 பேர் பலியானார்கள்.

ஜகார்த்தா நகருக்கு தென்மேற்கில் தாங்கராங் என்ற இடத்தில் இந்தப் பட்டாசு ஆலையில் நேற்று முன் தினம் வழக்கம்போல தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர்.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் பட்டாசு தீப்பிடித்து வெடித்து. இதனால் அங்கிருந்த பட்டாசுகள் வெடித்தது, நாலாபுறமும் சிதறின. அந்த ஆலையின் மேற்கூரை தூக்கியெறியப்பட்டது.

இந்தத்தீவிபத்தில் தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினரும், மீட்புப் படையினரும் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

ஆனால் 50 தொழிலாளர்கள் உடல் கருகி பலியானார்கள், அவர்களைக் கரிக்கட்டைகளாகத்தான் மீட்க முடிந்தது. அவர்களது உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு உருக்குலைந்து போயின.

படுகாயம் அடைந்த நிலையில் 35 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால், சாவு எண்ணிகை மேலும் உயரும் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தப் பட்டாசு ஆலை கடந்த 6 வாரங்களாகத்தான் இயங்கி வந்தது என அந்தத் தகவல்கள் மேலும் தெரி விக்கின்றன.

விபத்து நடந்தபோது 103 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரியவந்துள்ளது. (ப)

## 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சுனாமி?



ஆதாரமான மண்டையோடு

சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவரின் மண்டைஓடு கிடைத்துள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாக் கண்டத்தில் உள்ள சிறிய தீவான பப்புவா நியூ கினியாவில் கடந்த 1929 ஆம் ஆண்டு ஐடாப் என்ற இடத்தில் மனித மண்டைஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இந்த மண்டைஓடு எத்தகைய காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கும் என விஞ்ஞானிகள் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து வந்தனர்.

1998ஆம் ஆண்டு இதே பகுதியில் ஏற்பட்ட ஒரு சுனாமி தாக்குதலுக்குப் பின்னர், இங்குள்ள மண் மற்றும் அந்த மண்டைஓடு ஆகியவற்றை சர்வதேசக் குழு ஒன்று ஆராய்ச்சிக்கு உட்படுத்தியது.

இந்த நிலையில், 1929ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட மண்டைஓடு சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என்றும், இதற்குச் சொந்தமான நபர் சுனாமி தாக்குதலால் இறந்திருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளனர்.



## பெண் ரோபோவுக்கு சவுதியின் குடியுரிமை

ரியாத்,ஒக்.28

பல்வேறு நாடுகளில் வாழும் வெளிநாட்டினருக்குக் குடியுரிமை கிடைப்பதில் கடும் பிரச்சினையும், சிக்கலும் உள்ளது. ஆனால் ஒரு பெண் ரோபோவுக்கு சவுதி அரேபிய அரசு குடியுரிமை வழங்கியுள்ளது.

அந்த ரோபோவின் பெயர் சோபியா. இதை ஹொங்கொங் நிறுவனமான 'ஹன்சன் ரோபோடிக்சு நிறுவனத்தைச் சேர்ந்த டேவிட் ஹன்சன் வடிவமைத்துள்ளார். இது பெண் போன்று மிக இனிமையாகப் பேசுகிறது. கேட்கும் கேள்விக்கு மனிதர்கள் போன்று சரமாரியாகப் பதில் அளிக்கிறது. இந்த ரோபோ அமெரிக்க நடிகை ஆட்ரி ஹெப்பர்ன் போன்ற தோற்றத்தில் உள்ளது.

சவுதி அரேபியா அரசின் குடியுரிமை பெற்ற சோபியா ரோபோ பேட்டி அளித்தபோது கூறியவை வருமாறு:-

என்னை ஒரு தனித்துவத் தன்மையுடன் சிறப்புடன் உருவாக்கியதற்காகப் பெருமைப்படுகிறேன். என்னை உருவாக்கியவர்களை மதிக்கிறேன். நான் மனிதர்களுடன் வாழவும், பணிபுரியவும் விரும்புகிறேன்.- எனத் தெரிவித்துள்ளார்.

## ஐதரசன் குண்டுச் சோதனை நிச்சயம் நடத்தியே தீருவோம்

பசிபிக் பெருங்கடல் பகுதியில் நிச்சயம் சக்திவாய்ந்த ஐதரசன் குண்டுச் சோதனை நடத்தப்படும் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா சக்திவாய்ந்த அணுகுண்டுகளை அவ்வப்போது சோதித்து வருகிறது. அமெரிக்காவின் அலாஸ்காவை குறிவைத்தே பெரும்பாலும் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்தன. மேலும் வடகொரியா மீது ஐ.நா. பொருளாதாரத்தடை விதிக்கவும் ஆதரவு தெரிவித்தன.

அமெரிக்காவின் மிரட்டல் பொருளாதாரத் தடை போன்றவற்றால் கோபமடைந்த வடகொரியா தனது அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்துத் தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது. வடகொரியாவைத் தடம் தெரியாமல் அழித்து விடுவோம்


வடகொரிய எச்சரிக்கை

என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்திருந்தார். அதற்கு வடகொரியா எந்த பிரச்சினையையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகப் பதிலளித்தது.

மேலும் சக்திவாய்ந்த ஐதரசன் குண்டுப் சோதனை பசிபிக் பெருங்கடல் பகுதியில் நடத்தப்படும் என்று வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். வடகொரியாத் தலைவர்களின் பேச்சு உலக நாடுகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் வடகொரியாவின் வெளியுறவு அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் நாங்கள் நிச்சயம் பசுபிக் பெருங்கடல் பகுதியில் ஐதரசன் குண்டுச் சோதனையை நடத்துவோம். இது வெறும் வார்த்தையல்ல என உலக நாடுகளுக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரியின் இந்த பேச்சு உலக நாடுகள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே வடகொரியாவின் நடவடிக்கையால் தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் போர் பதற்றம் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.




## மலிக், ஹசன் அலியின் சிறப்பாட்டத்தால்

# இலங்கையை வீழ்த்திய பாகிஸ்தான்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று முடிந்திருக்கும் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி-20 போட்டியில் இலங்கை அணியை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்தியிருக்கும் பாகிஸ்தான், மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் 1:0 என முன்னிலை அடைந்துள்ளது.

அபுதாபிமைதானத்தில்ஆரம்பமாகியிருந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அஹ்மட் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தை இலங்கை அணிக்கு வழங்கியிருந்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 போட்டிகளுக்காக விசேடமாக அறிவிக்கப்பட்டிருந்த இலங்கை அணியில் இந்தப் போட்டிக்காக நீண்ட காலத்தின் பின்னர் துடுப்பாட்ட வீரர் மஹேல உடவத்த அழைக்கப்பட்டிருந்தார் என்பதோடு, இளம் துடுப்பாட்ட வீரரான சதீர சமரவிக்ரமவும் தனது கன்னி ரி-20போட்டியில்விளையாடும்வாய்ப்பினை பெற்றிருந்தார்.

இவர்களோடு, போட்டித் தடையைப் பெற்றிருந்த தனுஷ்க குணத்திலக்கவும் அணிக்கு திரும்பியிருந்தார். இன்னும், இப்போட்டி மூலம் திசர பெரேரா இலங்கை கூ-20 அணியின் 9ஆவது தலைவராக பொறுப்பேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து நாணய சுழற்சி முடிவுகளுக்கு அமைவாகத் தமது துடுப்பாட்டத்தை ஆரம்ப வீரர்களான தனுஷ்க குணத்திலக்க மற்றும் தில்ஷான் முனவீர ஆகியோருடன் ஆரம்பமாகிய இலங்கை அணிக்கு போட்டியின் மூன்றாவது பந்திலேயே இமாத் வஸீம் அதிர்ச்சியளித்தார்.

இதனால் இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக போல்ட் செய்யப்பட்ட தில்ஷான் முனவீர ஓட்டமேதுமின்றி மைதானத்திலிருந்து நடந்தார்.

மோசமான ஆரம்பத்தை இலங்கை பெற்றிருப்பினும் அதனைக் கருத்திற்கொள்ளாது அதிரடியாக ஆடிய தனுஷ்க குணத்திலக்க அணியின் ஓட்டங்களை விரைவாக அதிகரித்திருத்தார். எனினும் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் உஸ்மான் கானினால் அவரது இன்னிங்ஸ் 18 ஓட்டங்களுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இலங்கை அணியின் மத்தியவரிசை பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களால் மிகவும் நெருக்கடிக்குள்ளாகியது. மஹேல உடவத்த, சஜித் பத்திரன, தசுன் சானக்க ஆகிய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஓய்வறை நடந்தனர்.

இதனால் ஒரு கட்டத்தில் இலங்கை அணி 68 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து மிகவும் இக்கட்டான நிலைக்குச் சென்றது. இந்நிலையில், களமிறங்கிய அணித் தலைவர் திசர பெரேராவும் இலங்கை அணிக்குக் கைகொடுக்கவில்லை.

எனினும், இறுதியில் போராட்டத்தைக் காட்டிய சீக்குகே பிரசன்னவால் சரிவில் இருந்து சற்று மீண்டு கொண்ட இலங்கை அணி 18.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 102 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக சீக்குகே பிரசன்ன 2 சிக்ஸர்கள் அடங்கலாக 23 ஓட்டங்களினைப் பெற்று ஆட்டமிழக்காது நின்றிருந்ததோடு சதீர சமரவிக்ரமவும் அதே ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருந்தார்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் வலதுகை வேகப்பந்து வீச்சாளரான ஹசன் அலி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை சாய்த்திருந்ததார். மொஹமட் ஹபீஸ் மற்றும் உஸ்மான் கான் ஆகியோரும் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்திருந்தனர்.

தொடர்ந்து, இலகு வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 103 ஓட்டங்களைப் பெற பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி, ஆரம்பத்தில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை பறிகொடுத்து ஒரு தடுமாற்றத்தைக் காண்பித்திருப்பினும் சொஹைப் மலிக்கின் சிறப்பாட்டத்தால் வெற்றி இலக்கை 17.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து அடைந்தது.

பாகிஸ்தானின் துடுப்பாட்டத்தில் அவ்வணியை வெற்றிப்பாதையில் வழிநடாத்திய அனுபவ வீரர் சொஹைப் மலிக் மொத்தமாக 31 பந்துகளில் 4 பௌண்டரிகள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். முன்னாள் தலைவர் மொஹமட் ஹபீஸும் 25 ஓட்டங்களுடன் அணிக்கு வலுச்சேர்த்திருந்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் வேகப்பந்து வீச்சாளரான விக்கும் சஞ்சய 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

(ப)

# டோனியின் புதிய சாதனை

நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி வீரர் டோனி புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் இடையில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய வீரர் டோனி இரண்டு பந்துப் பிடிகளை எடுத்தார்.

இதில் முதல் பந்துப் பிடிப்பில் போது சர்வ தேச அளவில் இந்திய மண்ணில் அதிக பந்துப் பிடிகளை எடுத்த வீரர்கள் பட்டியலில் டோனி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இதுவரை 308 போட்டிகளில் பங்கேற்றுள்ள டோனி, இந்திய மண்ணில் நடந்த போட்டிகளில் மட்டும் 201 பந்துப் பிடிகளை எடுத்துள்ளார்.

இது தவிர, இந்திய மண்ணில் 200 பந்துப் பிடிகளின் பட்டியலில் டோனி முதலிடம் (201) பிடித்துள்ளார். இப்பட்டியலில் டிராவிட்,



அசாருதீன், சச்சின் ஆகியோர் அடுத்த மூன்று இடங்களில் உள்ளனர்.

இதோடு சர்வதேச ஒருநாள் அரங்கில் அதிக பந்துப் பிடிகளை எடுத்த விக்கெட் காப்பாளர் பட்டியலில் டோனி நான்காவது இடத்தில் உள்ளார்.இப்பட்டியலில் ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் (417 பந்துப் பிடிகள்), தென் ஆபிரிக்காவின் மார்க் பவுச்சர் (402), இலங்கையின் சங்ககார (383) ஆகியோர் முதல் மூன்று இடங்களில் உள்ளார்கள்.

# ஊக்க மருந்து பிரச்சினையில் சிக்கிய இந்திய வீரர் யார்?

இந்திய வீரர் ஒருவர் ஊக்க மருந்து பயன்படுத்தினார் என உலக ஊக்க மருந்துத் தடுப்பு அமைப்பு உறுதிப்படுத்தியது. ஆனால், அவரது பெயர், விவரம் என்பன வெளியி டப்படவில்லை.

உலக ஊக்க மருந்து தடுப்பு அமைப்புக்கு இந்திய கிரிக்கெட் சபை சார்பில் 153 வீரர்களின் ரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. இதில் இந்திய வீரர் ஒருவர் ஊக்க மருந்து பயன்படுத்தினார் என்பது உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

ஆனால், அவரது பெயர் விவரம் என்பன வெளியிடப் படவில்லை. அவர் உள்ளூர் போட்டிகளில் விளையாடி உள்ளார் என்றும் தகவல் கிடைத்து இருக்கிறது. இதுபற்றி கிரிக்கெட் சபை உறுப்பினர் ஒருவர் கூறுகையில்-

உலக ஊக்க மருந்துத் தடுப்பு அமைப்பிடம் இருந்து எந்த அறிக்கையும் எங்களுக்கு வரவில்லை. இதனால் வீரரின் பெயரை வெளியிடும் நிலையில் நாங்கள் இல்லை என்றார். ஏற்கனவே 19 வயதுக் குட்பட்டோர் போட்டியில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர் பிரதீப் சங்வான் ஊக்க மருந்து பயன்படுத்தி சிக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒவ்வொரு வகை சர்வதேச தொடருக்குமென உரிய வீரர்கள் இனங்காணப்பட உள்ளனர்

டெஸ்ட் தொடர், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர், சர்வதேச இருபது:20 கிரிக்கெட் தொடர் ஆகிய ஒவ்வொரு வகை கிரிக்கெட் தொடருக்குமென உரிய வீரர்கள் இனங்காணப்பட்டு குழாம்களில் இணைக்கப்படுவார்கள் என இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுத் தலைவர் க்ரேம் லெப்ரோய் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் தலைமையகத்தின் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் பேசிய அவர், இலங்கை கிரிக்கெட் அணிகள் எதிர்காலத்தில் எவ்வாறு தெரிவு செய்யப்படும் என்பது பற்றியும் விளக்கினார்.

அங்கு லெப்ரோய் தொடர்ந்தும் பேசியவை வருமாறு- தொடரும் காலங்களில் ஏகப்பட்ட சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை பங்குபற்றவுள்ளது. இந்தியாவுக்கு எதிராக மூவகை தொடர்கள் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடர்களின் போது அந்தந்த வகை கிரிக்கெட் போட்டிகளுக்கென வீரர்களை இனங்கண்டு வாய்ப்பு வழங்கவுள்ளோம். அதன் மூலம் அவர்கள் நீண்ட காலம் அணியில் தாக்குப்பிடிக்க முடிவதுடன் அந்தந்த வகை கிரிக்கெட்டில் அவர்களால் பிரகாசிக்கக்கூடியதாகவும் இருக்கும். தொடர்ச்சியாக சகல தொடர்களிலும் ஒரே வீரர்கள் விளையாடுகின்றமையால் அவர்கள் நெருக்கடியை எதிர் கொள்ளநேரிடும்.- என்றார்.



இதேவேளை, எதிர் காலத்தில் உடற்தகுதியில் தேறுபவர்கள் மாத்திரமே கிரிக்கெட் குழாம்களில் இணைக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சரின் பரிந்துரைக்கு அமைய உடற்தகுதியில் தேறும் வீரர்கள் மாத்திரமே குழாமில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். சர்வதேசத்தொடர்கள் ஆரம்பமாவதற்கு 3 வாரங்கள் இருக்கும்போது உடற்தகுதி பரிசோதனைகள் நடத்தப்படும். அவற்றில் தேறுபவர்கள், உடற்தகுதியை நிரூபிப்பவர்கள் மாத்திமே இறுதிக் குழாமில் இணைக்கப்படுவார்கள்.

அணியின் உதவியாளர்கள், உடற்கூற்று மருத்துவர் ஆகியோரின் கருத்துக்களும் பெறப்பட உள்ளன. அதன் பின்னர் துடுப்பாட்ட வீரர்களின் எண்ணிக்கை, வேகப்பந்து வீச்சாளர்களின் எண்ணிக்கை, சுழல் பந்துவீச்சாளர்களின் எண்ணிக்கை, சகலதுறை வீரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை பயிற்றுநரிடம் கேட்டறிவோம்.

தொடர்ந்து அணித் தலைவர், பயிற்றுநர் ஆகியோருடன் கலந்துரையாடி குழாமைத் தெரிவு செய்வோம். போட்டி நடைபெறுவதற்கு முன்னர் அணி முகாமையாளர், அணித் தலைவர், உதவி அணித் தலைவர், பயிற்றுநர் ஆகியோர் இணைந்து இறுதி பதினொருவரைத் தெரிவு செய்வர் எனத் தெரிவித்துள்ளார்.



# 8 ஆண்டுகளின் பின் அணியில் இடம் கிடைத்தும் சொதப்பிய வீரர்

இலங்கை அணியின் இடதுகை துடுப்பாட்ட வீரரான மஹேலா உடவத்த 8 வருடங்களுக்குப்பின் அணியில் இடம் கிடைத்தும் சொதப்பியுள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி சொதப்பியதால், ரி-20 தொடரில் இலங்கை அணியில் இளம் வீரர்கள் பெரும்பாலானோருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

அப்படி அணிக்கு 8 வருடங்களுக்குப் பின் திரும்பியவர் தான் மஹேலா உடவத்த( வயது-31). இவர் ஆரம்ப காலத்தில் ஜெயசூர்யாவுக்கு மாற்று வீரராக வரலாம் என்றும், கிரிக்கெட் வாழ்க்கை மிகவும் பிரகாசமாக இருக்கும் என்றும் கூறப்பட்டது. ஆனால் பெரிய அளவில் சாதிக்காதமையால், அணியில் தொடர்ந்து இடம் கிடைக்கும் அவர் வாய்ப்பை இழந்தார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் ரி-20 போட்டியில் இவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தாமல் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அப்போட்டியில் இலங்கை அணியும் தோற்றது.

இலங்கை அணிக்கு 9 ஒருநாள் போட்டிகள் மற்றும் 5 ரி-20 போட்டிகளில் விளையாடிய மஹேலா உடவத்த கடைசியாக கடந்த 2009 ஆம் ஆண்டு நியூஸிலாந்து அணிக்கு எதிரான ரி-20 போட்டியில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ப)

# பெண்கள் டெனிஸ் சம்பியன்ஷிப் அரையிறுதியில் வீனஸ் வில்லியம்ஸ்

உலக பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் நேற்று நடந்த ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் ஸ்பெயினின் கார்பின் முகுருஜாவை வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.



முதன்நிலை 8 வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ள உலக பெண்கள் டெனிஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வருகிறது.

இதில் வைட் பிரிவில் நேற்று முன்தினம் கடைசி கட்ட லீக் ஆட்டங்கள் நடந்தன. ஓர் ஆட்டத்தில் பிரெஞ்ச் ஓபன் சம்பியனான ஜெலினா ஆஸ்டாபென்கோ (லாத்வியா) 6:3, 6:1 என்ற நேர் செட்டில் கரோலினா பிளிஸ்கோவாவை (செக்குடியரசு) பதம் பார்த்தார்.

இருப்பினும் அஸ்டாபென்கோவுக்கு இது ஆறுதல் வெற்றியாகவே அமைந்தது. இதே பிரிவில் நடந்த மற்றோர் ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 7:5, 6:4 என்ற நேர் செட்டில் ஸ்பெயினின் கார்பின் முகுருஜாவை சாய்த்தார். இந்தப் பிரிவில் பிளிஸ்கோவா, வீனஸ் வில்லியம்ஸ் தலா 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் அரை இறுதிக்குள் நுழைந்தனர். அஸ்டாபென்கோ, முகுருஜா தலா ஒரு வெற்றி, 2 தோல்வியுடன் வெளியேறினார்.

# பணிப்பெண்ணிடம் அநாகரிகமாக நடந்து கொண்ட கிறிஸ் கெய்ல்




ஓய்வறைகளுக்கான பணிப் பெண்ணிடம் தனது பிறப்பு உறுப்பைக் காட்டினார் என பிரபல கிரிக்கெட் வீரர் கிரிஸ் கெய்ல் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் சம்பவம் 2015ஆம் ஆண்டு உலக கிண்ணப் போட்டிக்கு இடையே இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் ஆஸ்திரேலிய பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்த நிலையில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறவில்லை என கிரிஸ் கெய்ல் அந்த பத்திரிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுத்திருந்தார்.

கிரிஸ் கெய்லின் ஓய்வறைக்கு அறைப் பணிகளை மேற்கொள்ள வந்த பணி பெண்ணிடம் என்ன தேடுகிறாய் என கிரிஸ் கேட்ட போது துவாயை தேடுவதாக பணிப்பெண் பதிலளித்துள்ளார். கிரிஸ் கெய்ல் தான் அணிந்திருந்த துவாயை அகற்றி தன்னிடம் பிறப்புறுப்பைக் காட்டினார் எனப் பணிப் பெண் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அதைத் தொடர்ந்து பொலிஸார் கிரிஸ் கெய்லுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்.

என்.எஸ் .டபிள்யூ உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்து இரண்டு வருடங்களாக நடைபெறும் வழக்கின் சாட்சி விசாரணைகள் நேற்றுடன் முடிவடைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ப)

## கணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உட்பட சிறிய தாயாருக்கும், தனது குடும்பத்தி னருக்கும் கடிதம் எழுதி வைத்து விட்டுதானும்நச்சுத்திராவகத்தைக் குடித்துதனது குழந்தைகளுக்கும் பருக்கித் தாயும் பிள்ளைகளும் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் யாழ்.அரி யாலை ஏ.வி.வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று இடம்பெற் றுள்ளது.

கிரிசாந்தன் சுனேந்திரா மற் றும் அவரது பிள்ளைகளான கிரி சாந்தன் சர்சா(வயது 4), கிரிசாந் தன் சஜித் (வயது 2), கிரிசாந்தன் சரவணா (வயது 2) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரிய வந்தவை வருமாறு:-

கணவர்நகைக்கடை வேலை செய்பவர். இவர் கடந்த ஒகஸ்ட் மாதம்தற்கொலைசெய்துள்ளார்.

தற்கொலைசெய்த குடும்பத்தி னர், தமது குடும்ப நண்பர் களுக்கு சிநேகித அடிப்படையில் 1கோடியே 17 லட்சம் ரூபா கடன் கொடுத்துள்ளனர். 6 மாத கால தவணையில் மீளத் தருவதாக கூறியிருந்தும், அவர்கள் அப் பணத்தை மீளக்கொடுக்க வில்லை.

மூத்த சகோதரனிடம் கேட்ட போது, "10 லட்சம் ரூபா தானே நான் தர வேண்டும். நீ செய்கி றதை செய்து பார்" என பதிலளித் துள்ளார். பணம் பெற்றுக் கொண்டவரின் மனைவியிடம் கேட்டபோது, "நான் பொறுப்பு நின்றதற்கு என்ன ஆதாரம் இருக்கு" எனத் திருப்பிக் கேட்டுள் ளார். இவ்வாறு நடந்ததன் பின் னர்தான் யாழ். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள் ளது. வழக்கில்வெல்ல முடியாமல் இருந்தபோது கடந்த ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி யாழ்.நீதி மன்றில் நடைபெற்ற வழக்கிற்கு சென்று வந்த நிலையில்தான் கணவர் கிரிசாந்தன் தனது குடும்பத்துடன் தற்கொலை செய்ய முயற்சித்த வேளையில், கணவர் முதலில் நச்சுத்திரா வகத்தைக் குடித்ததை அவர் மனைவி கண்டுள்ளார். கணவர் துடிதுடித்ததைக் கண்டவர் கண வனைக் காப்பாற்ற முயற்சித்த மையினால் தாம் அதைக் குடிக் கும் எண்ணத்தை கைவிட் டுள்ளார். கணவன் இறந்துபோக, அந்த விரக்தியில் குடும்பத்தினர் இருந்துள்ளனர். அந்த விரக்தி யின் காரணமாக நேற்றுத் தற் கொலைசெய்துகொண்டுள்ளனர் எனச்சிறிய தாயார் தெரிவித்தார்.

இந்த நிலையில், இவர்களும் மீண்டும் ஏதாவது செய்துவிடு வார்களோ என்ற பயத்தில் மிக வும் பாதுகாப்பாக பார்த்து வந்த தாகத்தாயார் கூறினார். மகளும் மற்றும் 3 பிள்ளைகளும் வீட்டில் தமது அறைக்குள் இருந்துள்ள னர். அறைக்குள் இருப்பதாக எண்ணிய சுனேந்திராவின் தாயார் சற்று நேரத்தின் பின்னர் வந்து பார்த்த போது, சிறுபிள்ளை களின் வாய்க்குள் இருந்து நுரை மாதிரி வந்துள்ளது. என்ன நுரை வருகின்றதென பார்த்தபோதே தற்கொலை செய்துள்ளனர் எனத் தெரிந்துகொண்டேன் என உயிரிழந்த பெண்ணின் தாயார் தெரிவித்தார்.

வீட்டில் இருந்த மேசையின் மீது கடித உறைக்குள் வைக்கப் பட்ட 3 கடிதங்களையும் பெற் றோர் எடுத்துள்ளனர். தனது நிலைமைகள் குறித்தும் அந்தக் கடிதங்களில் விவரித்துள் ளார். அந்தக் கடிதங்கள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் செழியன் மற்றும் அவர்களது சிறிய தாயார் உட்பட தனது பெற்றோருக்குமாக எழுதி வைக் கப்பட்டுள்ளன.

சடலங்கள் பிரேத பரிசோத னைக்காக யாழ்.போதனா வைத்தி யசாலையில் வைக்கப்பட்டுள் ளன. சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார்விசாரணைகளைமேற் கொண்டு வருகின்றனர். (இ)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் மற்றும் ஆசிரிய சங்கங்கள் உட் பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்த கலந்துரையாடல் நேற்று மாலை யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலி லேயே மேற்கண்டவாறாக தீர் மானிக்கப்பட்டுள்ளதாக கலந் துரையாடலின் முடிவில் அதன் பிரதிநிதிகள் நடத்திய ஊடக சந்திப்பின் போது தெரிவித்துள் ளனர்.

உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளது கோரிக்கை களை நிறைவேற்றி அனைத்து அரசியல் கைதிகளையும் அரசி யல் தீர்மானத்தினடிப்படையில் விடுதலை செய்ய வேண்டுமென நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

இதற்கமையவே போராட்டங் களை முன்னெடுத்ததுடன் ஹர்த்தாலையும் நடத்தியிருந் தோம். ஆனாலும் அரசாங்கம் இதுவரையில் உரிய நடவடிக் கையைமேற்கொள்ளாதநிலையே தற்போதும் காணப்படுகின்றது.

இதனால் தான் நாம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்து கலந்துரையாடியிருக்கி றோம்.இதற்கமையதொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுப்ப தற்கு தீர்மானித்திருக்கிறோம்.

அரசிற்கு எதிராகவும் அதே நேரம்அரசுக்குஆதரவைவழங்கி வருகின்ற அல்லது அரசுடன் இணைந்துசெயற்பட்டுவருகின்ற தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளுக்கு எதிராகவும் தொடர்ச்சியானபோராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் அரசியற் கைதிகளுக்கு ஆதரவாக தொடர்ச் சியாகநூங்கள்பலரும்இணைந்து முன்னெடுத்துவருகின்றநடவடிக் கைகளுக்கு சகலரும் தமது ஆத ரவை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். (இ)

## உயர்நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற நீதியரசர் குழா மில் அடங் கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

உயர்நீதிமன்றத்துக்கு 11 நீதி யரசர்களே உள்ளனர். அந்தப் பதினொரு இடங்களில் ஒன்று இப்போது வெற்றிடமாக உள்ளது.

எஞ்சிய பத்துப்பேரில் இருவர் இந்த வழக்கின் எதிர் மனுதாரர் கள். தமக்கு எதிரான வழக்கை அவர்கள் விசாரிக்க முடியாது.

ஏற்கனவே, மேலும் இரண்டு நீதியரசர்கள் தங்களது சக நீதியர சர்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள நண்பர்களுக்கு எதி ரானவழக்கைதாங்கள்விசாரிக்க விரும்பவில்லை எனக் கோடி காட்டிவிடடனர்.

எஞ்சிய ஆறுபேரில்எத்தனை பேர் தங்களது சக நீதியரசர் மற் றும்சட்டமா அதிபர்திணைக்களத் தின் மூத்த அதிகாரிகளுக்கு எதி ரான சித்திரவதைக் குற்றச்சாட் டுக்களைத்தாங்களே விசாரிக்க இணங்குவர் என்பது நேற்று மாலை வரை தெரியவரவில்லை.

வழக்கின்அடுத்தகட்டவிசா ரணையின் போது அது தெரிய வரும் என்று மனுதாரர் சட்டத்தர ணிகள்நம்பிக்கைவெளியிட்டனர்.

## தமிழர் தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ளது.

இன்றைய சமகால அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்து மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழு, இரா. சம்பந்தனிடம் எட்டுக் கேள்விகளை தொடுத்தும் மன் னார் மாவட்டத்தின் நிலைபாட் டைத் தெளிவுபடுத்தியும் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

இலங்கைஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டபின்னும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காகத் தாங்கள் எடுத்து வரும் அரசியல் தீர்மானங்கள் மற்றும் அர்ப் பணிப்புள்ள தங்களின் பணி களுக்கு எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும்கூறுவதோடு பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தி னுடைய பொறுப்புமிக்க சிவில் மானிடஉரிமைசெயற்பாட்டிலுள்ள பிரச்சினைகளாக இவற்றைத் தங்களின்கவனத்துக்குக்கொண்டு வருகின்றோம். அவையாவன:

★ இன்றைய சம காலத்தில் தமிழ் மக்கள் விடயத்தில் அரசு நடந்துகொண்டஏதாவது நேர்மை யான செயற்பாடு போர்க்குற்ற விசாரணை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் அரசு ஐ.நாவில் 2015 ஆம் ஆண்டுஒப்புக்கொள்ளப்பட்டமற் றும் 2017 ஆம் ஆண்டு கால நீடிப்பை பெற்றுக் கொண்ட விட யங்களில் நேர்மையுடனான செயற்பாட்டை அரசு முன்னெடுத் துள்ளதா?

★ முள்ளிவாய்க்காலில் நடத் தப்பட்ட இனப் படுகொலைக்கும் யுத்தக்குற்றங்களுக்கும் வெளி நாட்டு விசாரணையே அவசியம் எனத் தமிழர் தரப்பால் மிகவும் உறுதியாகக் கூறப்பட்டபோதும் 2015 ஆம் ஆண்டு ஐ.நாவில் கலப்புப்பொறிமுறைக்கு அரச பிரதிநிதிகள் இணங்கியபோதும் இவ்வாறான விசாரணைகளின் போது வெளிநாட்டுப் பிரதிநிதி களின் பிரசன்னத்துக்கோ பங்கு பற்றுதலுக்கோ ஒருபோதும் இட மளிக்கப்படமாட்டாது என ஜனாதி பதி, பிரதமர், நீதி அமைச்சர் மற் றும் அரச பிரதிநிதிகள் பலரும் உறுதிப்பட பல தடவைகள் தெரி வித்துள்ளனர். இதில் உங்கள் நிலைப்பாடு என்ன?

★ இந்த விடயத்தில் விசா ரணைக்குரிய முக்கிய தரப்பி னரான இராணுவத்தின் மீது எந்த வொரு விசாரணைக்கும் ஒரு போதும் இடமளிக்க முடியாது என ஜனாதிபதி பல தடவைகள் உறுதிபடத் தெரிவித்துவிட்டார். அத்தோடு காணாமல் ஆக்கப் பட்டவர்கள் எவரும் தற்போது உயிருடன் இல்லை எனப் பிரத மர் 2016 ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தில்நடைபெற்றபொங்கல் விழாவில் பகிரங்கமாகவே உரை யாற்றியிருந்தார்.இந்தநிலையில் உங்கள் கருத்து என்ன?

★ மேற்குறிப்பிட்ட நிலை களில் அரசின் ஆகக்குறைந்த நேர்மையோ நல்லிணக்கமோ வெளிப்படைத் தன்மையோ ஏதாவது உள்ளதா? அரசின் மேற்படி கொள்கைசார் நிலை களுக்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நிலைப்பாடு மாற்று நடவடிக்கை பதிலுரை என்ன? இந்த விடயங்களுக்காக தாங் கள் ஏன் ஒரு வெளிப்படையான பொறுப்புக்கூறக்கூடிய நேர்மை, நீதிமிக்க செயற்பாடுகளையோ விளக்கங்களையோ மக்களுக்கு முன்வைக்கவில்லை. ஏன் தயங் குகின்றீர்கள்.

★ தற்போது முன்னெடுக்கப் பட்டு வரும் அரசமைப்பு உரு வாக்கச் செயற்பாடுகளில் இன முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வுதொடர்பானதமிழர்தரப்பின் அடிப்படை அபிலாஷைகளான சுயநிர்ணயம்,தேசியம்,இணைந்த வடக்கு - கிழக்கு, காவற்றுறை காணி என்கின்ற விடயங் களையோ அதிகாரப் பகிர்வில் இணையாட்சி பற்றிய எந்த விடயங்களோ இல்லை. இவை உள்ளடங்க மாட்டா ஒற்றையாட்சி முறையே அடிப்படையாக இருக் கும் என உறுதிப்பட தெரிவிக்கப் பட்டபின்னரும்இந்தஅரசமைப்பை ஆதரித்து நிற்பதன் நோக்கம் என்ன? தமிழருக்கு நன்மை பயக்குமா?

★ இலங்கை வரலாற்றில் இந்தப் பிரச்சினைக்கு அடிப் படைக் காரணமாக அமைவது தமிழர் தரப்பின் பங்கு பற்றுதல் இன்றி 1972 ஆம் ஆண்டு மற் றும் 1978 ஆம் ஆண்டு உருவாக் கப்பட்டஅரசமைப்புகளேகாரணம் எனவும் தற்போது மட்டும் தான் அரசமைப்பு உருவாக்கத்துக்கு தமிழர் தரப்பு பங்கு பற்றுதலுக் கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதைக் குழப்பக்கூடாது சிறந்த தோர் அரசியல் தீர்வுக்கான அர சமைப்பாக அமையும் எனத் தாங்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றீர்கள். மேற்குறிப்பிட்ட அரசமைப்புகள் இரண்டும் அடிப் படையாக வலியுறுத்திய ஒற்றை யாட்சி ஒரே தேசம் பௌத்த சமய முன்னுரிமை சிங்கள இனத் துவரைவிட ஏனைய இனத்துவரை ஒரு தேசிய இனமாக ஏற்காமை போன்ற விடயங்களே இந்த அர சமைப்பிலும் அடிப்படை அம்சங் களாக அமையப் போகின்றன. இங்கே நாங்கள் குறிப்பிடும் தமி ழர் தரப்பின் பங்குபற்றுதல் என் பது 1972 ஆம் ஆண்டு மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் உரு வாக்கப்பட்ட அரசமைப்புகளுக்கு வேறு வடிவில் தமிழ் பிரதிநிதிகள் ஆதரவுதெரிவித்துஉறுதிப்படுத்தி இந்த அரசமைப்பு தமிழ் இனத் தின் நிரந்தர அடிமை சாசனமாக மாறிவிடக்கூடிய நிலையாகத் தமிழ் மக்கள் கருதுகின்றனர். இதற்கு உங்கள் பதில் என்ன?

★ தற்போதைய அரசுடன் பல விடயங்களில் இணங்கி இணக்க அரசியல்நடத்தும்தாங்கள் இந்த இணக்க அரசியல் மூலம் நல் லிணக்கத்தையும் சமாதானத் தையும்கட்டியெழுப்பலாம்என்று வலியுறுத்துவீர்கள் என்றால் எழு பது ஆண்டு அரசியல் வரலாற் றில்தமிழ்த்தரப்பு(தமிழரசுக்கட்சி, த.வி.கூட்டணி) தென்னிலங்கை யுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப் பந்தங்களை இணக்க அரசியல் என்பன ஏதாவது ஒரு நன்மை யைத் தந்தது எனத் தங்களால் குறிப்பிட்டுஎதுவும்கூறமுடியுமா?

இணக்க அரசியல் வரலாற் றில்தமிழினத்துக்கு கற்றுத்தந்த துன்பியல் அனு பவங்கள் வரு மாறு:

1956, 1965 ஆம் ஆண்டு களில் மேற்கொள்ளப்பட்ட பண் டாரநாயக்கா அரசு மற்றும் டட்லி சேனநாயக்கா அரசுடன் தீர்வுக் காக மேற்கொள்ளப்பட்ட புரிந் துணர்வு உடன்படிக்கைகளில் அரசுகளில் ஒரு தலைபட்ச மாகக் கிழித்தெறியபட்டமை -

1965 - 1970 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மாவட்டசபைத் தீர்வு என்கின்ற உடன்பாட்டுடன் ஐ.தே.கட்சி அரசில் தமிழரசுக் கட்சிபங்கெடுத்து அமைச்சுபதவி யும் பெற்றுக் கொண்டாலும் உடன்பாடு காணப்பட்ட மாவட்ட சபை தீர்வுக்கான எந்த முயற்சி யும் இன்றி ஏமாற்றப்பட்டமை -

கடந்த 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில்தனிநாடுதான் ஒரே தீர்வு எனவும் தமிழ்த் தரப்பு இலங்கை நாட்டில் பங்கு பற்றும் இறுதி தேர்தல் எனவும் கூறி மக் களின் பேராதரவுடன் வெற்றி பெற்று பின்னர் ஜே.ஆர். அர சுடனான இணக்க அரசியலில் ஆகக்குறைந்த தீர்வான மாவட்ட சபையை ஏற்றதன் விளைவு தமிழினத்துக்கெதிரான ஒடுக்கு முறை இன அழிப்பாக மாறியது. (1981 ஆம் ஆண்டு யாழ். நூலகம் எரிப்பு, 1983 ஆம் ஆண்டு இன அழிப்புக் கலவரம்) -

கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்பாடு எனும் நிலையில் இந்திய இரா ணுவ ஆக்கிரமிப்புக்கும் இந்தியா வின் வேண்டத்தகாத தலையீட் டுக்கும் காரணமாகியது.

கடந்த 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்தசந்திரிகாஅம்மை யாருடன் தாங்களும் காலம் சென்ற கலாநிதி நீலன் திருச் செல்வமும் (முன்னாள் பா.உ) இணைந்து ஓர் அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஈடு பட்டிருந்தீர்கள். ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்ட அந்த யாப்பு நகல் கூட நாடாளுமன் றத்தில் எரியூட்டப் பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தனுக்கான மகஜரின் பிரதிகள் தமிழ்த் தேசியக் கூட் டமைப்புப் பங்காளிக் கட்சிகள், வடமாகாண சபை முதலமைச் சர், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்ஆகியோருக்கும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-112)

## நீதித்துறையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, இந்த வழக்கை விசாரிக்க இணங்கும் நீதியர சர்கள் முன்னிலையில் அதை மீளவும் எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதிக்கு எடுப்பது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர் மானித்தது.

வெள்ளவத்தையைச் சேர்ந்த தமிழ் இளைஞரான எஸ்.பது நாதன் (பதுமன்) தாக்கல்செய்தி ருந்த இந்த அடிப் படை உரிமை மீறல்மனு, நேற்றுக்காலைஉயர் நீதிமன்றத்தில் நீதியரசர் கள் சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜெய வர்த்தனா, விஜித் மலால்கொட ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

மனுதாரர்சார்பில்ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகி மனு குறித்து விளக்க மளித்தார்.

எதிர் மனுதாரர்கள் சார்பில் மேல திக சொலிஸிட்டர் ஜென ரல் ஜனாதிபதி சட்டத்தரணி திரு மதி பர்ஸானா ஜமீல் முன்னி லையானார்.

வழக்குவிசாரணைஆரம்பித் திலேயேநீதியரசர்பிரியந்தஜெய வர்த்தனா தாம் இந்த வழக்கை விசாரிக்க விரும்பவில்லை என்றார். இந்த வழக்கின் முதல் இரு எதிர்மனுதாரர்களான - மேலதிகசொலிஸிட்டர்ஜெனரல் கள்ஜனாதிபதிசட்டத்தரணி துபுல டி லிவேரா, ஜனாதிபதி சட்டத் தரணியஸந்தகோட்டாகொடஆகிய இருவரும் எனது நண்பர்கள், அவர்களுக்குஎதிரானவழக்கை நான் விசாரிப்பது பொருத்தமற் றது என்று அவர் சொன்னார்.

தம்மைத்தவிர்த்து மற்றைய இருவரும் இந்த வழக்கைக் கொண்டு நடத்தலாம் என்றார் அவர்.

நேற்றைய நீதியரசர் குழாத் துக்குத் தலைமை வகித்த நீதி யரசர் சிசிர டி ஆப்ருவும் அதே கருத்தை முன்வைத்தார்.

அதனை மனுதாரர் தரப்பு சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆட்சேபித்தார்.

"இங்கு நாட்டின் ஒரு பிரஜை தமது அடிப்படை உரிமை மீறப் பட்டுள்ளது எனத் தெரிவித்து நீதிமன்றுக்கு வந்திருக்கின்றார். குற்றச்சாட்டுக்குஇலக்கானவர்கள் நீதியரசர்களுக்குத்தெரிந்தவர்கள் என்பதால் இந்தப் பிரஜைக்கு

பக்கம் 03 »

# செய்தி ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் சுயாதீன பேரவை குறித்து மீள்பரிசீலனை!

கொழும்பு, ஒக். 28

அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் நவீன ஊடகம் ஆகிய செய்தி ஊடகங்களைக் கட்டுப்படுத்த, சுயாதீனபேரவை ஒன்றை அமைப்பதற்கான வரைவு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

அந்த வரைவு தொடர்பாக ஊடக அமைப்புக்கள் தொடர்ச்சியாக அதிருப்தி வெளியிட்டு வருகின்றன.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இந்த வரைவு அவசியம் எனக் கூறப்பட்டாலும், செய்திகளைத் தரநிர்ணயம் செய்வது என்ற போர்வையில் செய்தியாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் போக்குகளை ஏற்க முடியாது எனக்கூறப்படுகிறது.

இந்த சுயாதீன பேரவையை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் மட்டக்களப்பு போன்ற இடங்களில் அரசால் நடத்தப்பட்டன. ஊடக அமைப்புகளும் இந்த வரைவில் உள்ள ஆபத்துக்கள் குறித்து தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் சுதந்திர ஊடக இயக்கம் இது தொடர்பாகத் தொடர்ச்சியான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது எனக் கூறப்படுகிறது. செய்தி ஊடகங்களை தரம்பிரித்து கட்டுப்பாடுகளை கொண்டுவர வேண்டும் என ஊடக அமைப்புகள் கூறுகின்றன.

ஏனெனில் நவீன ஊடகம் எனப்படும் பல இணைய செய்தித்தளங்கள் இயங்குகின்றன. அவற்றில் சில செய்தித் தளங்கள் தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் ஊடக ஒழுக்க விதிகளுக்கு மாறாகச் செய்திகளை வெளியிடுகின்றன.

குறிப்பாக குடும்ப பிரச்சினைகள், பெண்கள் பற்றிய தவறான கருத்துகளை நேரடியான படங்களுடன் சில செய்தித் தளங்கள் வெளியிடுகின்றன. ஆகவே, அவ்வாறான செய்தித் தளங்களை கட்டுப்படுத்த அல்லது விசாரணை நடத்தி வெளியிடப்பட்ட செய்தி குறித்தும், அந்த செய்தி சேகரிக்கப்பட்ட மூலத்தையும் கேட்டு அறிந்து சட்ட நடவடிக்கைஎடுப்பதில்தவறில்லை.

அவ்வாறு விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை ஊடக ஜனநாயக மீறலாகவும்கருத முடியாது. ஆனால், பிரதான ஊடகங்களை அவ்வாறு கட்டுப்படுத்த முடியாது என ஊடக அமைப்புகள் கூறுகின்றன.

குறிப்பாக, பிரதான ஊடங்களில் வெளிவரும் அரசியல், பொருளாதாரம் சார்ந்த செய்திகள், கட்டுரைகள், விமர்சனங்கள் பற்றிய மூலத்தை விசாரணைக்கு உட்படுத்த முடியாது.

அதாவது குப்பைத் தனமாக செய்தி எழுதும் செய்தியாளனையும் சமூக விடயங்களை முக்கியப்படுத்தி எழுதும் செய்தியாளனையும் ஒரே தராசில் நிறுத்திப்பார்க்க முடியாதென ஊடக அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

பிரதான ஊடகத்தில் பிரசுரிக்கப்பட்ட செய்தி ஒன்றின் மூலம் தொடர்பாக இந்த, அந்த செய்தி எழுதிய செய்தியாளரைத் தவிர வேறு யாருக்கும் செய்தி எடுக்கப்பட்ட மூலம் தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

அந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கூட, குறித்த அந்த செய்தி தொடர்பாக, செய்தி எழுதிய செய்தியாளனிடம் செய்தியின் மூலத்தை கேட்க முடியாது என்றும் ஊடக அமைப்புகள் கூறியுள்ளன.

ஆகவே, செய்தி ஊடகங்களை கட்டுப்படுத்துவது என்ற போர்வையில் பிரதான செய்தி ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் குறித்து, உயர் நீதிமன்ற விசாரணையில் கூட செய்தியின் மூலத்தை கேட்க முடியாது என்ற விதிமுறைகள் அரசாங்கம் தயாரித்த வரைபில் இல்லையென ஊடக அமைப்புகள் கூறிகின்றனர்.

அதேவேளை செய்தி ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சுயாதீன பேரவை ஒன்றை அமைப்பு குறித்து, அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றின் ஊடகத்துறையைச் சேர்ந்த மூத்த பேராசிரியர் ஒருவரின் ஆலோசனையை அரசாங்கத் தகவல் திணைக்களம் பெற்றுள்ளது.

இந்த வரைவு தொடர்பாக அரசு மீள் பரிசீலனை செய்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

## நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் இலங்கை இராணுவப் பிரிவு கௌரவிப்பு!





கொழும்பு, ஒக். 28

இலங்கையின் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் இலங்கை இராணுவப்பிரிவு கௌரவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட based Marshall Legacy Institute இன் 20ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு வொஷிங்டனில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 2ஆவது முறையாக இந்த கௌரவிப்பு இடம்பெற்றது.

இலங்கை கண்ணிவெடி அகற்றும் இலங்கை Mine Detection Dog Team இற்க்கு வழங்கப்பட்டுள்ளது.

## அதிகாரத்தைக் கைப்பற்றும் தேவை எமக்கில்லை!

### தலதா அத்துகோரள தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 28

இனம் மற்றும் மதங்களுக்கிடையில் வேறுபாட்டை உண்டாக்கி அரசியல் அதி காரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கம் ஜனாதிபதி தலைமையிலான அரசுக்கு ஒருபோதும் இல்லை என அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

சபரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில்இடம்பெற்றவைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டை பிளவுபடுத்த எடுக்கப்படும் முயற்சிகளை தடுப்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும் என அமைச்சர்சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அஹுங்கல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## பஸிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 28

திவிநெகும மோசடியில் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்குரிய 3 கோடியே 65 லட்சம் மில்லியன்ரூபாநிதியை மோசடி செய்தமை தொடர்பிலே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

(க)

## தோட்டப்புற மக்களுக்குக் காணியுடன் கூடிய தனி வீடுகள்!



தோட்டப்புற மக்களுக்குக் காணி உறுதிகளுடன் கூடிய தனி வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாயிரத்து 864 வீடுகளுக்கான காணி உறுதிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை வழங்கப்பட விருக்கின்றன என மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

தோட்டப்புற மக்களுக்கு காணி உறுதிகளுடன் கூடிய தனி வீடுகளை வழங்குவது தொடர் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள் ளது. இதன் கீழ், புதிய கிராமங்கள் என்ற வேலைத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட வேலைத்திட்டமும் அமுலாகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir



## தொண்டர் ஆசிரியர்கள் விவகாரம்:

# வடக்கு மாகாணசபையின் முடிவுக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்பு

வடக்கு மாகாணத்தில் நீண்ட காலம் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமைபுரிந்த 1044பேருக்கு நேர் முகப் பரீட்சை நடைபெற்று 182 பேருக்கு மட்டும் நியமனம் வழங்குவதென்ற மத்திய அமைச்சின் முடிவை மாற்றி அமைத்து அனைவருக்கும் நியமனம் கிடைக்க வழிசெய்யும் வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்கின்றது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்:-

வடக்கு மாகாணத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இவற்றில் தேவையான பாடத்துறைப் பட்டதாரி ஆசிரிய நியமனங்களை மட்டுமே வடக்கு மாகாணசபை வழங்க முடியும். ஏனைய நியமனங்கள் மத்திய கல்வி அமைச்சின் கையில் உள்ளது. இந் நிலையில் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகைமை அடிப்படையில் 1044 பேர் தொண்டராசிரியர்களாக கடமை புரிந்தார்கள் என்ற அடிப்படையில், நிரந்தர நியமனம் வழங்குவதற்காக மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகள் வடக்கிற்கு வருகை தந்து அத்தனை பேருக்கும் நேர்முகத் தேர்வை நடத்தியிருந்தனர்.

அவர்களில் 182பேர் மட்டுமே தகைமை உடையவர்கள் என்றும், அவர்களுக்கு மட்டுமே நியமனம் வழங்க முடியும் என்ற தெரிவுப் பட்டியல் வடக்கு மாகாண கல்வி அமைச்சிடம் வழங்கப்பட்டது.

அதனைஅடிப்படையாகக்கொண்டு வடக்கு மாகாண சபையின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்களோடு, உயர் அதிகாரிகளும் மத்திய கல்வி அமைச்சுடன் பேசி அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதன்படி வடக்கு மாகாண சபையில் முறையான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உறுப்பினர்கள் மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்பதோடு, அவர்களின் நியமனத்திற்கு இன்னும் துரிதமாகச் செயற்படவேண்டும் எனச் சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

அத்தோடு வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும், வழங்கப்படாதுள்ள ஆசிரியர்களின் நிலுவைகளை வழங்குவதற்கும் மேற்சொன்னது போன்ற குழு, கூட்டாகச் சென்று முறையான தகவல்களோடு மத்திய அரசிற்கு நெருக்கடிகளைக் கொடுத்து அவற்றை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் எனவும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## யாழ். பொது நூலகத்தில் கண்காட்சி

இன்று சனிக்கிழமையும் பார்வையிடலாம்







தேசிய வாசிப்பு மாத நிகழ்வையொட்டி யாழ். பொது நூலகம் நடத்தும் புத்தகக் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நடைபெற உள்ளது. நேற்று ஆரம்பமான இந்தக் கண்காட்சியில் பல மாணவ, மாணவிகள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ)

## தொண்டர் ஆசிரியர் அனைவரும் சேவையில் உள்ளீர்க்க ஏற்பாடு

### அங்கஜன் எம்.பி. தகவல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரியர் சேவையில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக வடக்கில் நேர்முக தேர்விற்கு தோற்றிய தொண்டர் ஆசிரியர்களில் தகுதியானவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 676 தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் இந்த விடயத்துக்கான அனுமதி கிடைத்துள்ளது. இதனை நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவர்களின் சேவைக்காலங்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் எழுத்துப் பரீட்சை நடத்தாமலும் சம்பவ திரட்டு புத்தகங்களின் பதிவுகள் இல்லாமலும் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட உள்ளன. இதற்கான அமைச்சரவை பத்திரத்தை ஜனாதிபதியின் செயலாளர் சிவஞானசோதி தயார்படுத்திக்கொண்டு உள்ளார் என்றும், அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் அமைச்சரவை அனுமதியும் அதனைத் தொடர்ந்து ஒரு மாதத்திற்குள் அவர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-21)



தேசிய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் 'போதையற்ற நாட்டை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் கைதடி தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி கிருபாகரன், சாவகச்சேரி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் அ.குனேஸ், சாவகச்சேரி இளைஞர் கழகங்களின் தலைவர் நக்கீரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-21)

## பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில்

# ஏழு குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் வழங்கினார் மாகாண உறுப்பினர் அகிலதாஸ்



(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் வறுமை கோட்டுக்கு உட்பட்ட 7 குடும்பங்களுக்கு நல்ல இன ஆடுகள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்றுக் காலை இந் நிகழ்வு கால் நடை வைத்திய அதிகாரி திருமதி சரோஜினிதேவி மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வடமாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கினார்.

சந்திரகாந்தி சிவானந்தராசா, இரத்தினசிங்கம் காண்டீபன், கலைச்செல்வன் தனுஜா, கமலாவதி நல்லசிவம், பத்மநாதன் மகேஸ்வரி, நடராஜா நவரட்ணம், தர்மலிங்கம் சதீபன் ஆகிய பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டன.

இங்கு கருத்து வெளியிட்ட அகிலதாஸ், வடமாகாணசபை உறுப்பினரான எனக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியினை ஜாதி பேதம், கட்சி பேதம் பாராது ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு வழங்கிவருகின்றேன். அது போன்று கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக பொது அமைப்புக்கள், இந்து ஆலயங்கள் ஆகிவற்றின் தேவைகளையும் பூர்த்திசெய்துவருகின்றேன்.

நகர அபிவிருத்திக்கு அப்பால் கிராம அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதைஎண்ணமாககொண்டு எனதுவேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன். - என்றார். (இ-7)

## அரசமைப்பு தொடர்பான கலந்துரையாடல்





மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள கூழாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுக் காலை மக்களுக்கு அரசமைப்பு தொடர்பான தெளிவுபடுத்தல்கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் விரிவுரையாளர்கள், அப்பகுதி அமைப்புக்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-81)









தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறை கிளைத் தொகுதி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.